கல்கி



KI

மார்ச் 10.1943

3 அ



★

தமிழ் நாட்டிற்கு
சகுந்தலை
படத்தை அளித்த

சந்திர பிரபா ஸினிடோன்

1943-ல் அளிக்கும்
நட்சத்திரப் படம்

மீரா

★

M. S. சுப்புலக்ஷ்மி

சித்தூர் நாகையா	N. S. கிருஷ்ணன்	K. சாரங்கபாணி
செருகளத்தூர் சாமா	T. A. மதுரம்	T. S. பாலையா

மற்றும்
பேபி ராதா
(சகுந்தலையில் பரதனாக நடித்த குழந்தை)
நடிப்பது

★


டைரக்ஷன் :
எல்லிஸ் R. டங்கன்

ஸ்டுடியோ :
நியூடோன் ஸ்டுடியோஸ்

இது
சந்திர பிரபா ஸினிடோன்
மற்றும்
நியூடோன் ஸ்டுடியோஸ்
சேர்ந்து தயாரிக்கும் படம்



60% மிச்சம்:
பெட்ரோல் செலவு ஒழிந்தது



T·V·S

பிரொட்யூஸர் கியாஸ் பிளாண்ட்

இந்தியா முழுவதிலும் மோட்டார் சொந்தக்காரர்களில் 4000 பேருக்குமேல் T. V. S. கியாஸ் பிளாண்டையே உபயோகிக்கின்றனர். காரணம் என்ன? மோட்டார் வைத்துக்கொள்ளும் செலவு சிக்கனப்படுத்துவதற்கு இதுவே சரியான வழி என்று அவர்கள் உணர்ந்து விட்டார்கள். அமைப்பிலும் உழைப்பிலும் மிகவும் நவீனமான சீர்திருத்தங்கள் யாவும் T. V. S. பிளாண்டில் இருக்கின்றன. மோட்டாரில் இந்த பிளாண்டை இணைப்பதும் ஓட்டுவதும் சுலபமாக இருக்கிறது. அது மட்டுமல்ல. பிளாண்டை வைப்பதினால் செலவுமுழுதும் சொற்பகாலத்துக்குள்ளாகவே ஏற்படும் சிக்கனத்தால் சரிசெய்யப்படுகிறது. T. V. S. பிளாண்டின் சில விசேஷ அம்சங்கள் :—

- ஸ்டார்டிங் அதிசுலபம்: சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- மும்முறை வடிகட்டும் வசதி: கியாஸை வேறெந்த பிளாண்டையும்விட நன்றாக சுத்தப்படுத்துகிறது
- இலவச ஸர்வீஸ்: ஓட்டும்போது சில்லரை தொந்தரவுகள் இருந்தால் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் சரிப்படுத்தித் தருவார்கள்.
- அதிக பளுவின்மை: சரிசமமான கனம் சிதறப்பட்டிருப்பதால் டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பரிதோபன்று அதிகம்.
- தேர்த்தியான தோற்றம்: அழகிய, ஒழுங்கான அமைப்பு

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ்

மதுரை, சென்னை

T. V. S. R—17M.


சந்தோஷ சமாசாரம்!


டி. கே. ப்ரொடக்ஷன்ஸார்

வெள்ளித் திரையில் உங்களது மனதைக் கவர்ந்த நடிக நட்சத்திரங்கள் யாவரும் நடிக்கும் உன்னத தமிழ்ச் சித்திரமாகிய

அருந்ததி

என்னும் படத்தை இம்மாதம் மீண்டும் ஆரம்பித்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.





உங்களைத் தேடி அவன்
குறிவைக்கப் போவதில்லை
இருந்தபோதிலும்......

விதி யாரை விட்டது! எதிர்பாராத விபத்துக்கு நீங்களும் ஆளாகலாம். தவிர்க்க முடியாததை எண்ணித் தவிப்பதில் பயனில்லை. உங்களது மனைவிக்கும் மக்களுக்கும் நீங்கள் உதவி செய்யக்கூடிய சாதனம்

இன்ஷ்யூரன்ஸ்

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:—

362, சைனா பஜார் ரோடு. :: எஸ்பிளனேட், மதராஸ்

கூந்தலை எல்வகையிலும் பாதுகாக்க வல்லது

கிரே-கான் Gray-con — ரூ. 1-0-0, ரூ. 3-12-0

பல் உபாதைகளைத் தடுக்கவும் குணப்படுத்தவும்

நஞ்சன்கூடு பல்பொடி

I.D.L.61, மெடிகேடட்

4 மாத அளவு அணா 12. போலிகளை மறுக்க

வைத்தியர்களும் விரும்பும் 3 இணையற்ற குடும்ப சஞ்சீவிகள்

ஜகதா கஸ்தூரி | ஸ்ரீ ஜகதா கோரோஜனை | மாலக்ஸ்

மூன்றும் அணா 14 6 வெளட் செலவின்றி

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு மதராஸ் (உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி)
(கோவை: 234, ராஜா வீதி) (திருச்சி: சைனா பஜார்) (மதுரை: 42, தெற்குஆவணி)

பிளட்-விட்டா

(இரத்த விருத்திக்கு)

எலக்டிரிக் சாமான்கள்

இரும்பு சாமான்கள்

ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன்

(மதராஸ்) லிமிடெட்.

மதராஸ்

நமது மாகாணத்தின் சகல பண்டங்களுக்கும்
புதிய போக்கு வரத்து சாதனங்கள்

கீழ்க்கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் உங்களுடைய வியாபார விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ ராமவிலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்.


போன் : மதராஸ் "8536" :: தந்தி : "ROADHAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள் :

1. செரி ரோடு, சேலம்.
2. ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்.
3. கண்டோன்மெண்ட், திருச்சினாப்பள்ளி.
4. கிருஷ்ணராயர் தெப்பகுளத் தெரு, மதுரை
5. ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோடு, பெங்களூர்

—— : மார்க்கங்கள் : ——

1. மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2. மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3. மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4. கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5. கோயமுத்தூர் — கரூர் — திருச்சினாப்பள்ளி
6. சேலம் — நாமக்கல் — திருச்சினாப்பள்ளி
7. சேலம் — உளுந்தூர்ப்பேட்டை — கடலூர்
8. மதுரை—திருச்சினாப்பள்ளி—தஞ்சாவூர் — நாகை
9. மதுரை — திருச்சி — கும்பகோணம் — நாகை



உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.

கல்கி

பொருளடக்கம்

மலர் 2 இதழ் 23	1943 மார்ச் 10	சித்திரபானு ௵ மாசி 26௳

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.



தேசத் தொண்டில் தலை நரைத்துப் போன தேச பக்தர்களுக்குள்ளே இன்று சேலம் ஸி. விஜயராகவாச்சாரியார் அக்கிரஸ்தானம் வகிக்கிறார். "மாபெருங் கிழவர்" என்னும் சிறப்புப் பெயருக்கு அவருடன் போட்டியிடக் கூடியவர் வடநாட்டில் பண்டித மாளவியாஜி ஒருவர்தான். ஆனால் மாளவியாஜிக்கு வயது 84தான் ஆகிறது. நமது தமிழ்நாட்டு மாபெருங் கிழவருக்கோ வயது 92. ஆயினும் அவர் பூரண அறிவுத் தெளிவுடன் இருக்கிறார் என்பதை மகாத்மாவின் உபவாசத்தைப் பற்றிக் கேட்டு அவர் கவலையுடன் அனுப்பிய செய்தியிலிருந்து தெரிந்து கொண்டோம். காங்கிரஸ் அக்கிராசன பதவி வகிக்கும் பேறு பெற்ற தென்னாட்டுத் தேச பக்தர் வெகு சிலரில் ஸ்ரீ விஜய ராகவாச்சாரியாரும் ஒருவர். 1921ல் மகாத்மாவின் வேலைத் திட்டத்தை ஒப்புக்கொண்ட மிக முக்கியமான நாகபுரி காங்கிரஸ் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரின் தலைமையில்தான் நடந்தது. மனிதர்க் குரிய நூறு வயதும் அதற்கு மேலும் ஆச்சாரியார் வாழ்ந்திருந்து தமிழ் நாட்டுக்குப் பெருமை யளிப்பாராக.

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

என்ன சேதி?

சுரண்டல் கணக்கு


"ஆற்றில் போட்டாலும் அளந்து போடு", "சுரண்டினாலும் கணக்குப் பார்த்துச் சுரண்டு" என்னும் முதுமொழிகளை யனுசரித்து இந்திய சர்க்கார் வருஷந்தோறும் ஒரு வரவு செலவுத் திட்டத்தை இந்திய சட்டசபையில் சமர்ப்பிப்பது வழக்கம். இந்திய சட்டசபையும் அதை ஒரு கட்டாய சிராத்தமாகப் பாவித்து ஒப்புக் கொண்டு தொலைப்பது வழக்கம். பட்ஜட் விவாதத்தின் போது சாதாரணமாய் இந்திய சட்டசபை அங்கத்தினர் தூங்கி வழிவார்கள். பத்திரிகைக்காரர்கள் தூங்கி வழிந்துகொண்டு தலையங்கம் எழுதுவார்கள். பொது ஜனங்கள் அரைத் தூக்கத்துடன் மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டு வேறு வேலை பார்ப்பார்கள். ஆனால், இந்த வருஷத்து வரவு செலவுத் திட்டமானது வழக்கம் போல் தூக்கத்தை வருவிப்பதற்குப் பதிலாக எல்லாரையுமே தூக்கி வாரிப் போடுவதா யிருக்கிறது! முக்கியமாக, "இந்தியா வருகிற வருஷத்தில் 200 கோடி ரூபாய் யுத்தச் செலவு செய்யப் போகிறது" என்பதை அறியும்போது நம்மை மேக மண்டலம் வரையில் தூக்கி வாரிப் போடத்தான் செய்யும். அப்படித் தூக்கி வாரிப் போடாமலிருக்க ஒரே ஒரு வழி இருக்கிறது. "இந்த இருநூறு கோடி ரூபாயும் இந்தியாவை எதிரிகளிட மிருந்து காப்பாற்றுவதற்காகவே — செலவாகிறது. இதில் ஒரு செம்பா லடித்த — நடுவில் தொளையுள்ள — புதிய காலணாக் காசு கூட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகச் செலவழிக்கப்படவில்லை" என்னும் மந்திரத்தை இருநூறு கோடி தடவை நாம் ஜபிக்க வேண்டும். அப்போது, நம்மைத் தூக்கி வாரிப் போடாம லிருக்கும்.


நாற்பது கோடி கடன்


கணக்குத் தான் போடுகிறார்களே? சரியாகப் போடத் தெரிகிறதா? சென்ற வருஷத்து வரவு செலவுத் திட்டத்தில் 47 கோடி ரூபாய் துண்டு விழுமென்று எதிர்பார்த்தார்கள்; உண்மையில் 94 கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. அதாவது ஒட்டிக்கு இரட்டி. இவ்வளவு அழகாகக் கணக்குத் தயார் செய்தவருக்கு 188 கோடி 'சபாஷ்' போட நாம் தயாரா யிருக்கிறோம். அதே கணக்கு நிபுணர் ஸர் ரெயிஸ்மான் வரும் வருஷத்தில் 60 கோடி ரூபாய் துண்டு விழும் (அதாவது வரவுக்கு மேல் செலவாகும்) என்று மதிப்பிட்டிருக்கிறார். இந்த அறுபது கோடியையும் எப்படி ஈடு செய்வது? இருக்கிற வரிகளை உயர்த்தியும் புது வரிகள் போட்டும் 20 கோடி ரூபாய் ஈடு செய்யப் போகிறாராம். பாக்கி நாற்பது கோடி ரூபாய் கடன் வாங்கப் போகிறாராம். "கவர்ன்மெண்டுக்கு அழகு கடன் வாங்குதலே" என்று பொக்கிஷ மெம்பர் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டினார். அப்படியிருக்கும்போது "அந்த அழகான காரியத்தை முழுக்கவே செய்து விடக் கூடாதா? அறுபது கோடியையும் கடன் வாங்கியிருக்கலாமே? புதிய வரிகள் போட்டுப் பிராணனை ஏன் வாங்குகிறீர்கள்?" என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? கேளுங்கள்! கேளுங்கள்! தாராளமாய்க் கேளுங்கள்! கேட்கவேண்டா மென்று யாரும் சொல்லவில்லை. வரியை மட்டும் கட்டிவிட்டுக் கேட்டுக் கொண்டே யிருங்கள்.


புது வரிகள்

புதிய வரிகளில் வ்ருமான வரி உயர்வைப் பார்த்ததும், "ஸ்வாமி! ஆண்டவனே! வருமானத்தைக் கொடுத்து விடாதே!" என்று பலருக்கும் பிரார்த்திக்கத் தோன்றும். புகையிலையை உபயோகப் படுத்துகிறவர்கள் "புகையிலை உபயோகத்தினால் வரும் கெடுதி"களைப் பற்றி அடிக்கடி ஞாபகப் படுத்திக் கொள்வார்கள். தபால் — டெலிபோன் கட்டண உயர்வுகளைப் பற்றி நாம் ஒன்றும் சொல்லத் தயாராயில்லை. "கடிதம் வராத வரையில் எல்லாரும் க்ஷேமம்" என்ற சித்தாந்தத்தைமட்டும் ஞாபகப்படுத்தி வைக்கிறோம். மாடுகள் "எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்" என்று முறையிட்டுக் கொண்டிருப்பதினாலேயே "வனஸ்பதி"க்கு வரிபோட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறோம்.


ஆகாகான் அரண்மனை
பம்பாய் சர்க்கார்
மகாத்மாவின்
இருபத்தோருநாள்
உபவாசம் முடிந்ததும்
பழையபடி சிறைக்கதவு
மூடிப் பூட்டப்பட்டது.
இந்திய வானத்தில் சிலகாலமாக ஒரு
வால்நட்சத்திரம் தென்பட்டு வருகிறது.
அதைத் தடுப்பதற்கு வைஸராய் ஒரு
விசேஷச்சட்டம் பிறப்பிக்கலாம் என்று
எதிர்பார்க்கப் படுகிறது.
இந்தியக் கப்பற்படைக்காக இன்னொரு 'ஸ்லூப்' படகு
லண்டனில் தயாராயிற்று. அதை இந்திய
டெபுடி ஹைகமிஷனரின் மனைவி கடலில்
இறக்கினர்!
இந்தியக் கடற்படை
"ஒருபக்கத்தில் கவர்னரும் இன்னொருபக்கத்தில் ஐ.ஸி.எஸ்.காரர்களும்
நெருக்குவதினால் திண்டாட்டம் அடைவதாக"
வங்காள பிரதமமந்திரி
பஸ்லுல் ஹக் முறையிடுகிறார்!


இந்தப் பெண்மணியை உன் தர்மபத்தினியாக ஏற்றுக் கொள்கிறாயா?
அவளைக் கேட்பானேன்? கட்டாயம் ஏற்றுக் கொள்கிறேன்!
இந்திய சட்டசபை
(கட்டாய விவாகம் நடக்குமிடம்)
பொக்கிஷ மெம்பர் செயிஸ்மான்.
200 கோடிரூபாய் யுத்தபட்ஜட்.
இந்தியர்


ராஜாஜி இன்னும் நம்பிக்கையைக் கைவிடாமல் இந்திய அரசியல் சிக்கலைத் தீர்க்க வழிதேடிக்கொண்டிருக்கிறர்.
நம்பிக்கை
இந்திய அரசியல்


ருஷியாவில்
சஞ்சேனை அடைந்து வரும் மகத்தான வெற்றிகளை.....
.....அமரிக்காவும் பிரிட்டனும் ரொம்ப ரொம்பப் பாராட்டுகின்றன.

பூட்டை உடைக்க வேண்டும்

இந்த துர்ப்பாக்கிய தேசத்தின் மீது பகவான் இன்னும் சிறிது கருணை வைத்திருக்கிறார் என்று தெரிகிறது. கடவுளின் கருணையினாலும், நமது முன்னோர்களின் தவப் பயனாலும் மகாத்மா காந்தி உயிர் பிழைத்தார். தள்ளாத வயதில், பலவீனமாய்ப் போன உடல் நிலையில், இருபத்தோரு நாள் முழுமையும் உபவாச மிருந்து காந்தி மகான் பிழைத்து எழுந்தார். ''உயிர்ப் பிச்சை கொடுங்கள்'' என்று பிரிட்டிஷ் சர்க்காரை நோக்கி நாம் மன்றாடினோம். பிரிட்டிஷ் சர்க்கார் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆனால், பகவானுடைய காதில் நமது பிரார்த்தனை விழுந்தது. ''உயிர் பிழைத்தே தீர்வேன்'' என்ற மகாத்மாவின் மன உறுதியும் நமது பிரார்த்தனை நிறைவேறுவதற்கு ஒத்தாசை செய்தது. அந்த மன உறுதிதான் இந்திய மக்களை மகத்தான பழிச் சொல்லிலிருந்து காப்பாற்றியது

ஆம், இந்திய மக்களைத்தான். மகாத்மாவின் உயிருக்கு அபாயம் நேர்ந்திருக்குமானால் பிரிட்டிஷாருக்கு மகத்தான அபகீர்த்தி ஏற்பட்டிருக்கும் என்பது உண்மையே. ஆனால் அதை விடப் பயங்கரமான அவப் பெயர் இந்திய மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும். ''காந்தி மகான் சிறையில் பட்டினி கிடந்து அணு அணுவாகப் பிராணத் தியாகம் செய்தார்; இந்தியாவின் நாற்பது கோடி மக்களும் வழக்கம்போல் உண்டு, உடுத்து, தொழில் செய்து கொண்டிருந்தார்கள்'' என்ற அழியாத வசைச் சொல் உண்டாகி யிருக்கும். அத்தகைய விபரீதம் நேராதது இந்தியாவின் எத்தனையோ துர்ப்பாக்கியங்களுக்கு மத்தியில் ஒரு பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்.

மகாத்மா உபவாச மிருந்த இருபத்தோரு நாளும் பிரிட்டிஷ் சர்க்கார் சிறைக் கதவைத் திறந்து வைத்திருந்தார்கள். ''இதோ காந்தி இருக்கிறார் எலும்பும் தோலுமாக! பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று காட்டிக் கொண்டிருந்தார்கள். பெரிய பெரிய டாக்டர்களை விட்டு அவருடைய தேகத்தைத் தினம் பரிசீலனை செய்து அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார்கள். ' ''அபாயம்'' ''ரொம்ப அபாயம்'' ''பிழைப்பது துர்லபம்'' என்பது முதலான அறிக்கைகளைப் பிரசுரித்து, ஜனங்களைப் 'பெரிய' செய்திக்குத் தயார்ப் படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் மகாத்மாஜியோ பெரிய பெரிய டாக்டர்களுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் சேர்த்து நாமத்தைப் போட்டு விட்டு உயிர் பிழைத்துவிட்டார்.

இருபத்திரண்டாம் நாள் மகாத்மா உபவாசத்தை முடித்து ஆரஞ்சுப் பழ ரசம் அருந்தியதும், திறந்திருந்த சிறைக் கதவை சர்க்கார் மறுபடி இழுத்துச் சாத்தினார்கள். பெரிய பூட்டாகப் போட்டுப் பூட்டினார்கள். ''சிறை விதிகள் மீண்டும் அமுலுக்கு வருகின்றன'' என்று தெரிவித்தார்கள். மகாத்மாவின் தேக நிலை பற்றிய அறிக்கை இனிமேல் வராது என்றும் அறிவித்து விட்டார்கள்.

சரி; மேற்கொண்டு என்ன?

மகாத்மா சிறையிலேயே இருக்க வேண்டியதுதானா? மற்றக் காங்கிரஸ் தலைவர்களும் அடைபட்டுக் கிடக்க வேண்டியதுதானா? தேசத்தில் யதேச்சாதிகார ஆட்சியின் அமுல் நடந்து கொண்டே யிருக்க வேண்டியதா? யுத்தம் முடிந்த பிறகு பிரிட்டிஷார் பெரிய மனது செய்து தலைவர்களை விடுதலை செய்தால் உண்டு — இல்லாவிட்டால் இல்லையா?

ஆம்; பிரிட்டிஷார் விரும்பும் நிலை மேற்கண்டதுதான். அதையே நாமும், ஒப்புக்கொண்டு சும்மா இருக்கப் போகிறோமா? அல்லது, மகாத்மா முதலியவர்களை விடுதலை செய்யவும், யதேச்சாதிகார ஆட்சியை மாற்றித் தேசிய சர்க்காரை அமைக்கவும் பெரு முயற்சி செய்யப் போகிறோமா?

* * *

இருபத்தோரு நாள் மகாத்மா காந்தி உண்ணாவிரத மிருந்தார். அதனுடைய பலன் என்ன?

ஆத்ம சாதனமாகவும், அரசியல் சாதனமாகவும் மகாத்மா உபவாச விரத மிருந்தார். ஆத்மீகத் துறையில் மகாத்மா அடைந்த பலன்களை அவர்தான் அறிந்திருக்க முடியும். ஆனால் அரசியல் துறையில் ஏதேனும் பலன் விளைந்ததா?

ஆம்; ஒரு முக்கியமான பலன் விளைந்துதான் இருக்கிறது. தற்கால

அரசியல் நிலைமையைப் பற்றி மகாத்மாஜியின் அபிப்பிராயங்களை நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். மிகவும் முக்கியமான — விவாதத்துக்கிடமான — அரசியல் பிரச்னைகளில் அவருடைய அபிப்பிராயங்கள் வெளியாகியிருக்கின்றன.

உபவாச விரதத்திற்குப் பூர்வாங்கமான மகாத்மா — வைஸராய் கடிதங்களிலிருந்து, பின் வரும் மூன்று விஷயங்களைப் பற்றி மகாத்மாவின் அபிப்பிராயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம் :—

(1) நாசவேலை — தந்தியறுத்தல், தண்டவாளங்களைப் பெயர்த்தல் முதலிய காரியங்களை மகாத்மா ஒப்புக் கொள்ளவில்லை. இரகசியமாகச் செய்யவேண்டியிருக்கும் எந்தக் காரியத்தையும் அவர் வெறுக்கிறார். மேற்கூறிய காரியங்கள் காங்கிரஸ் திட்டம் என்று சொல்லப்படுவதை மறுக்கிறார்.

(2) காங்கிரஸ் தலைவர்கள் கைதியான அடியோடு தேசத்தில் நடந்த பலாத்காரச் செயல்களுக்கு மகாத்மா பேரிலும் காங்கிரஸ் பேரிலும் பிரிட்டிஷார் பொறுப்புக் கட்டுவதை அவர் அடியோடு நிராகரிக்கிறார்.

(3) மேற்கூறிய பொய்க் குற்றச்சாட்டுகளின் பேரில் தம்மையும் மற்றக் காங்கிரஸ் தலைவர்களையும் சிறைப் படுத்தி வைத்திருப்பதை மகாத்மா விரும்பவில்லை. ஆதலின், அவர் சிறையிலிருந்து விடுதலை கோருகிறார்.

மேற்கூறிய மகாத்மாவின் அபிப்பிராயங்கள் வெளியானது அவருடைய உபவாசத்தினால் தேசத்துக்கு விளைந்திருக்கும் முக்கிய பலனாகும். இது எவ்வளவு முக்கியமானது என்பதை அறிந்து கொள்ள வேண்டுமானால் பழைய கதையைக் கொஞ்சம் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும்.

*　　*　　*

தந்தியறுத்தல் முதலிய பலாத்காரச் செயல்கள் காங்கிரஸ் திட்டம் அல்லவென்றும், மகாத்மா காந்தி அச்செயல்களை விரும்ப மாட்டாரென்றும் நமது தலைவர் ராஜாஜி அப்போதே எடுத்துக் கூறினார். ஏறக்குறைய அதே சமயத்தில் அதே விஷயத்தைப் பற்றி மகாத்மாஜி வைஸராய்க்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால், அந்தக் கடிதத்தை வைஸராய் வெளிப்படுத்தவில்லை. ராஜாஜி வைஸராயைச் சந்தித்தபோது கூட அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. ஏன்?

தந்தியறுத்தல் முதலிய காரியங்கள் காங்கிரஸ் திட்டம் என்பதாக முதன் முதலில் பகிரங்கப் படுத்தியவர் யார் என்பதையும் இச்சமயம் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்த அடியோடு இந்தியா மந்திரி கர்னல் அமெரி ஒரு ரேடியோப் பிரசங்கம் செய்தார். அதில், "தந்தியறுத்தல், தண்டவாளம் பெயர்த்தல் முதலியவை



[மகாத்மாவைப் பற்றிய கவலை நீங்கியதில் ஏற்பட்ட குதூகலம் ராஜாஜியின் முகத்தில் பிரதிபலிக்கிறது. பக்கத்திலிருப்பவர் ஸ்ரீமதி ஜம்னாலால் பஜாஜ்.]

காங்கிரஸ் திட்டம்'' என்று கூறினர். இந்த அற்புதமான ரேடியோப் பிரசங்கம் இந்தியாவுக்குத் தந்திச் செய்தியாகவும் அனுப்பப்பட்டு எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாயின!

அமெரியின் மேற்படி ரேடியோப் பிரசங்கம் எவ்வளவு மௌடீகமானது, எவ்வளவு விபரீத பலன்களைக் கொடுக்கக்கூடியது என்பதை அப்போதே நாம் எடுத்துக் காட்டினோம். அது உண்மையான காங்கிரஸ் திட்டமாயிருந்தாலுங் கூட அமெரி அதை அச் சமயத்தில் பகிரங்கப்படுத்தியிருக்கக் கூடாது. உண்மையில்லாததை, பொய் ஆதாரங்களை வைத்துக் கொண்டு, அவ்விதம் அமெரி பேசியது மகத்தான குற்றச் செயலாகும். இந்தக் குற்றத்தின் பொருட்டுக் கர்னல் அமெரியைக் குறைந்த பட்சம் இந்தியா மந்திரி பதவியிலிருந்து விலக்கியிருக்க வேண்டும். அதனால் நேர்ந்த விபரீத பலன்களை உத்தேசிக்கும்போது நியாயமாக ஆயுள் பரியந்தம் தீவாந்திர சிட்சை விதித்திருக்க வேண்டும். இதற்கெல்லாம் மாறாக, கர்னல் அமெரி இன்னமும் இந்தியா மந்திரி பதவியில் இருந்து வருவது இந்திய அரசியல் சம்பந்தமான எத்தனையோ பெரும் விந்தைகளில் ஒன்றாகும்.

அமெரியின் அந்த அசட்டுப் பிரசங்கத்தையும், பிற்பாடு மகாத்மாவின் கடிதத்தை வைஸ்ராய் வெளிப் படுத்தாமல் வைத்திருந்ததையும் எண்ணிப் பார்க்கும்போது, பலாத்காரக் குற்றங்களை நடக்காமல் தடுப்பதைக் காட்டிலும் அக் குற்றங்களுக்குக் காங்கிரஸ் மேல் பழி சுமத்துவதிலேயே பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அதிக சிரத்தை இருந்திருப்பதாய்த் தோன்றுகிறது!

ஆனால், அந்தப் பழி காங்கிரஸின் மீது ஒரு நாளும் ஒட்டாது என்பதை மகாத்மாவின் உபவாசம் உலகுக்கெல்லாம் எடுத்துக் காட்டி விட்டது. அதோடு மகாத்மாவின் விருப்பம் இன்னதென்பதையும் நமக்குத் தெரிவித்திருக்கிறது.

* * *

சரி, மேலே என்ன? மகாத்மாவின் விரதம் மங்களகரமாக முடிந்து விட்டதென்ற திருப்தியுடன் இருந்துவிடப் போகிறோமா? அல்லது பொய்க் குற்றம் சாட்டப் பட்டுச் சிறையிலிருக்கும் மகாத்மாவையும் மற்றக் காங்கிரஸ் தலைவர்களையும் விடுவிக்கப் பெரும் பிரயத்தனம் செய்யப் போகிறோமா? எந்த விதத்தில் அத்தகைய பிரயத்தனத்தைச் செய்யப் போகிறோம்?

நல்ல வேளையாக வழி காட்டுவதற்கு ராஜாஜி நமது மத்தியில் இருந்து வருகிறார். யார் சும்மா இருந்தாலும் அவர் சும்மா இருக்கப் போவதில்லை. எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அவர் பொருட் படுத்தப் போவதில்லை. எவ்வளவு தோல்விகள் நேர்ந்தாலும் மேலும் மேலும் அவர் பிரயத்தனம் செய்து கொண்டுதானிருப்பார்.

ராஜாஜி ஏதோ தேசத்துக்குத் தீங்கான யோசனைகளைச் சொல்லி விட்டதாக மௌடீகத்தினால் சிலர் பேசி வந்தார்கள். உண்மையில் ராஜாஜி எவ்வளவு தீர்க்க திருஷ்டியுடன் யோசனை சொல்லி வந்திருக்கிறார் என்பது அவர்களுக்குக் கூட இப்போது தெரிந்திருக்கலாம்.

தற்சமயம் தேசத்துக்குச் சரியான வழிகாட்டக் கூடியவர் ராஜாஜி ஒருவர் தான். அவருடைய கைகளுக்கு பலங் கொடுப்பது தேச பக்தியும் காங்கிரஸ் அபிமானமும் உள்ளவர்களின் கடமை.

* * *

மகாத்மா முதலியவர்களை விடுதலை செய்ய தேசத்தில் மகத்தான கிளர்ச்சி நடக்க வேண்டும். தேசமெங்கும் இதே பேச்சாயிருக்கவேண்டும். பத்திரிகைகளில் எல்லாம் இதே எழுத்தாயிருக்க வேண்டும். அவசியமானால், நமது தலைவர்களில் சிலர் இங்கிலாந்துக்குப் போக வேண்டும்.

காங்கிரஸ் தலைவர்களைப் பூட்டியிருக்கும் பூட்டு உண்மையில் சிறைப் பூட்டு அல்ல. பிரிட்டிஷ் பிடிவாதம் என்கிற பூட்டுத்தான். இந்தப் பூட்டை உடைத்தாக வேண்டும்.

இங்கிலாந்திலுள்ள சாதாரண மக்கள் பொய்ப் பிரசாரம் காரணமாக இந்தியாவைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள். உண்மை வெளிச்சம் உள்ளே வராதபடி மனக் கதவைப் பூட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மனப் பூட்டையும் உடைக்கவேண்டும்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கும், சிறைக் கதவுகள் திறப்பதற்கும் மற்றொரு பெரிய முட்டுக்கட்டையாயிருப்பது காங்கிரஸ் - லீக் வேற்றுமையாகும். இந்த முட்டுக்கட்டையைத் தகர்த்தெறிய வேண்டும்.

ராஜாஜியின் தலைமையில் மேற்கூறிய காரியங்கள் எல்லாம் தீவிரமாக நடந்து வெற்றி யளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

அக்கப் போர்

“காசி”

ஸ்ரீமதி சியாங்கே ஷேக், நியூயார்க் மேயர் அளித்த விருந்துக்குப் போயிருந்த போது திடீரென்று மூர்ச்சை போட்டு விழுந்தாராம்.

“அமெரிக்காவிலிருந்து சீனவுக்கு ஆகாய விமானங்கள் நிஜமாகவே அனுப்பியாகி விட்டது” என்று சில விருந்தாளிகள் பேசிக் கொண்டிருந்தது அவர் காதில் விழுந்திருக்கலாம்.

* * *

“சீனவுக்கு ஸயாமைப் பிடித்துக் கொள்ளும் ஆசையே கிடையாது” என்று மார்ஷல் சியாங்கே ஷேக் கூறுகிறார்.

எனக்கும் ஸயாமையோ, சந்திர மண்டலத்தையோ பிடித்துக் கொள்ளும் ஆசை கொஞ்சங்கூடக் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு விடுகிறேன்.

* * *

ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்குக் கப்பல் கப்பலாகக் கோதுமை வந்து கொண்டிருக்கிறதாம்.

எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. கோதுமையை இறக்கி விட்டுத் திரும்பிப் போகும் கப்பல்களில் இங்குள்ள இத்தாலியக் கைதிகளை யெல்லாம் ஏற்றிக் கொண்டு போய்விடலாம். இதனால் இரண்டு நன்மைகள் உண்டு. இந்தியாவில் உணவுப் பஞ்சம் குறையும். “ஆஸ்திரேலியா வெள்ளையருக்கே” என்று கோஷிக்கும் ஆஸ்திரேலியர்களும் தங்கள் நாட்டுக்கு வெள்ளைக்காரக் கைதிகள் வந்ததில் பரம சந்தோஷ மடைவார்கள்.

* * *

“சமையலுக்காக உபயோகிக்கும் கரண்டி முதலிய பாத்திரங்கள் ‘தொழில் கருவிகள்’ அல்ல” என்று நீதிபதி ஹார்வில் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

பாத்திரங்களின் விலை ஏகப்பட்டதாயிருக்கும் இந்தக் காலத்தில் மேற்படி தீர்ப்பை வரவேற்கிறேன். சமையற்காரரிடம் இந்தத் தீர்ப்பைக் காட்டிப் பாத்திரங்களில்லாமலே சமையல் செய்யும்படி பயமுறுத்தலாமல்லவா?

* * *

ஸென்டிரல் ஸ்டேஷனில் மலபார் எக்ஸ்பிரஸில் டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியாருக்காக ரிஸர்வ் செய்திருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த ஓர் ஐரோப்பியர் அதை விட்டு எழுந்திருக்க மறுத்து விட்டாராம்.

ஸ்டேஷன் சூப்பிரெண்டெண்டும், ரயில்வே போலீஸ் அதிகாரியும் எவ்வளவோ ‘தலையிட்டுப்’ பார்த்தும் பயனில்லை. கடைசியில் சர்வ கலாசாலையின் உப-அத்யக்ஷகரான டாக்டர் முதலியார் வேறு ஆசனத்தில் அமர வேண்டியதாயிற்றாம்.

* * *

போலீஸ் அதிகாரிகள் ‘தலையிடுவது’ என்பதைப்பற்றி எண்ணும்போது மற்ற இடங்களில் நடக்கும் காரியம் ஞாபகத்துக்கு வருகிறது. “...... கலாசாலை ஹாஸ்டலிலிருந்த மாணவர்கள் சரியாக நடந்து கொள்ளாததால் போலீஸ்காரர்கள் தலையிடும்படி ஆயிற்று. அதன் பயனாகப் பதினெட்டு மாணவர்கள் சர்க்கார் வைத்தியசாலையில் வைத்தியம் பார்த்துக் கொள்கிறார்கள்” என்பது போன்ற செய்திகளைப் பத்திரிகைகளில் அடிக்கடி படிக்கிறோம். ஆனால் மேற்படி ரயில்வே தகராறில் போலீஸ்காரர் ‘தலையிட்டும்’ பிரயோஜனப்படவில்லை என்பதைக் கவனிக்கும்போது ரொம்பவும் ஆச்சரியமாயிருக்கிறது. போலீஸார் அங்கே எந்த விதமாகத் தலையிட்டார்களோ என்ற யோசனையும் உண்டாகிறது.

கொசு வலைக்குள் புகுந்து கொண்ட கொசுக்களை விரட்டுவதைப் பற்றி ஒரு ஹாஸ்ய ஆசிரியர் எழுதியது ஞாபக மிருக்கிறதா? அவர் என்ன என்ன தந்திரங்கள் எல்லாமோ கையாளுகிறார். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் கொசுக்களைப் பார்த்துக் கைகூப்பி “கொசுக்களே! வெளியேறுங்கள்!” என்று பிரார்த்தனை செய்து கொள்ளுகிறார்.

அது மாதிரியே மேற்படி போலீஸ் அதிகாரிகளும் வண்டியிலிருந்த ஐரோப்பியரைப் பார்த்து,

இறங்கலாமோ — ஐயா நீங்கள்
இந்த முதல் கிளாஸ் — வண்டியிலிருந்து
இறங்கலாமோ ஐயா!
ஏழைப் போலீஸ்காரர் அல்லவோ
நாங்கள் ......?

என்று பாடிப் பிரார்த்தனை செய்து பார்த்தார்களா என்பது தெரியவில்லை.

கேட்டுப் பாருங்கள் !

இந்தியாவில் அநேக ரேடியோ நிலையங்களுக்குத் திறப்பு விழாக்கள் நடந்திருக்கின்றன. பெரிய மனிதர்கள் திறந்து வைத்துப் பேசியிருக்கிறார்கள். ஆனால் எந்த ரேடியோத் திறப்புவிழாவிலும் ஒரு பிரதம நீதிபதி இது வரையில் பாடியது கிடையாது. அத்தகைய மகிமை திருவாங்கூர் ரேடியோவுக்குத்தான் ஏற்படுகிறது. மார்ச்சு 12உ வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் திருவாங்கூர் ரேடியோ நிலையத்தில், மகாராணியார் திறப்புவிழாப் பிரசங்கம் செய்ததும், நமது திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் பாடப்போகிறார். முருகனுடைய திருப்புகழைத்தான் பாடப்போகிறார். நமது திருப்புகழ் மணி திருவாங்கூர்ப் பிரதம நீதிபதியானாலும் இன்னமும் திருப்புகழ் மணி யாகத்தான் இருக்கிறார் என்று அறிந்து மகிழ்கிறோம். அவர் தொட்டதெல்லாம் துலங்கும் என்பதை அறிவோமாதலால், திருவாங்கூர் ரேடியோவின் அதிர்ஷ்டத்தை வியந்து வாழ்த்துகிறோம்.

12உ இரவு 7-30 க்கு வாயு பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டு 455·9 மீட்டரைத் திருகுங்கள்.

* * *

சென்னை ரேடியோவில் வருகிற வாரத்தில் இரண்டு ராஜகுமாரிகள் கச்சேரி செய்கிறார்கள். 12உ பொப்பிலி ராஜகுமாரி இந்திராதேவி 8–15க்கு வீணை வாசிக்கிறார். 13உ மாலை 5 மணிக்கு ஸ்ரீமதி டி. ஆர். ராஜகுமாரி வாத்ய கோஷ்டியுடனும் ஸ்ரீமதி தனலக்ஷ்மியுடனும் பாடுகிறார். வீணையும் பாட்டும் எப்படி யிருக்குமென்று என்னைக் கேட்கா தீர்கள். நானும் கேட்டுப் பார்க்கத்தான் போகிறேன்.

11உ திருச்சியில் பாகவதர் கச்சேரி. (பாகவதர் என்றால் இப்போதெல்லாம் ஸ்ரீ தியாகராஜ பாகவதர்தான்.)

12உ திருச்சியில் ஸ்ரீ அங்கப்பப் பிள்ளை நாதஸ்வரம்.

13உ சென்னையில் 'மாலி'யின் புல்லாங்குழல். திருச்சியில் நாகர்கோயில் மகாதேவனின் தமிழ் வாத்தியங்கள்.

14உ திருச்சியில் கே. எஸ். நாராயணசாமியும் மற்றும் இருவரும் கோஷ்டியாக வீணைக் கச்சேரி செய்கிறார்கள்.

15உ திருச்சியில் மருங்காபுரி கோபால கிருஷ்ணையர் வயலின் கச்சேரி; பழனி முத்தையாப் பிள்ளை மிருதங்கம்.

16உ சென்னையில் குன்னக்குடி வெங்கட் ராமய்யரின் பாட்டு. பரம்பரையாக வந்த உயர்ந்த சங்கீதம்.

17உ திருச்சியில் தேவகோட்டை ஸ்ரீ நாராயண அய்யங்கார் வீணையும் ஸ்ரீ சுந்தர ராஜய்யங்கார் மிருதங்கமும்.

18உ திருச்சியில் பாலக்காடு ராம பாகவதர்.

19உ திருச்சியில் என். எஸ். ராஜண்ணு பிள்ளை நாதஸ்வரம்.

20உ திருச்சியில் தொழுந்தூர் சீனிவாசாசாரி பாடும் கம்பராமாயணப் பாடல்களை (ராக தானங்களுடன்) மத்தியானம் 1-மணிக்குக் கேட்க முடியாவிட்டால் மாலை 6-மணிக்காவது தமிழன்பர்கள் அவசியம் கேட்கவும்.

சென்னையில் அன்று வஸுந்தரா தேவியின் கர்நாடக சங்கீதம். ('வகு சங்கீதம்' அல்ல.)

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் கால க்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர் "ஞாபக மறதி" என்பதை எழுதிய சா. சுப்ரமணியம், நெ. 55, மேல வீதி, திருவாதி.

பூசாரி கொடுத்த வரம்

"ராஜ்"

பழைய மாம்பலத்தில் ரயில்வே பாதைக்குக் கொஞ்ச தூரத்தில் ஓர் சிறிய அம்மன் கோயில் இருக்கிறது. வெள்ளிக்கிழமை தோறும் அந்தக் கோயிலில் கூடும் கூட்டத்துக்குக் கணக்கில்லை. காரணம் அந்த அம்மன் ஒரு வரப் பிரஸாதி என்று சொல்கிறார்கள். கேட்கும் வரங்களெல்லாம் கொடுக்கிறாராம். ஆனால் அப் பேசாத் தெய்வம் ஒரு பேசும் தெய்வம் மூலமாகவே அந்த வரங்களை வழங்கி வந்தாள். அந்தப் பேசும் தெய்வம் குறி சொல்லும் பூசாரியைத் தவிர வேறு யாரும் இல்லை. பக்த கோடிகள் கோயிலுக்குக் கொண்டு போக வேண்டியதெல்லாம் ஓர் எலுமிச்சம் பழம், கற்பூரம், இரண்டணாக் காசு அவ்வளவுதான்.

இந்தக் கோயிலில் நடக்கும் சமாசாரம் தம்புச் செட்டித் தெருவில் ஒரு பெரிய வீட்டில், ஒரு சிறிய அறையில் குடியிருக்கும் கணேச முதலியார் இல்லக்கிழத்தி சாரதாம்பாள் காதில் எப்படியோ விழுந்து விட்டது. அவள் தன் கணவனிடம், தங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ள ஊருக்கெல்லாம் தெய்வமாக விளங்கும் மாம்பலம் கோயில் பூசாரியிடம் போய் வேண்டிக் கொள்ளச் சொன்னாள்.

கணேசனுக்கு இவைகளில் எல்லாம் நம்பிக்கையே கிடையாது. "பைத்தியமே! கொடுக்கிற தெய்வமாக இருந்தால் அது கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும். நீ என் பிராணனை எடுக்காதே" என்று அலக்ஷியமாகக் கூறி விட்டார்.

சாரதாம்பாளோ விடுவதாக இல்லை. "உங்களைச் சொல்லி என்ன பிரயோஜனம்? எல்லாம் என் தலை எழுத்து. இந்த யுத்த காலத்தில் கூட உங்களுக்குச் சம்பாதிக்கத் தெரியவில்லை. என் கஷ்டம் என்னோடுதான் போக வேண்டும்" என்று அலுத்துக் கொண்டே "எனக்காகவாவது மாம்பலம் போய் வரமாட்டீங்களா?" என்று கெஞ்சினாள்.

"ஐயோ! சாரதா, என்னைத் தொந்தரவு பண்ணாதே; நீ வேணுமானால் போய்த் தொலை. என்னால் இதற்கெல்லாம் போய்க் கொண்டு இருக்க முடியாது" என்று கூறி விட்டார் முதலியார். "போகிறது. அதற்காவது ஒப்புக் கொண்டீர்களே" என்று சாரதா சந்தோஷப்பட்டாள்.

ஒரு வெள்ளிக்கிழமை தினம் சாரதாம்பாள் பழைய மாம்பலம் அம்மன் கோயிலுக்குப் போனாள் என்று சொல்ல வேண்டியதில்லை. அன்று அவளுடைய அதிர்ஷ்டம் அங்கே கூட்டம் அதிகம் இல்லை. வாசலில் ஒரே ஒரு சிறு பையன் மட்டும் இருந்தான்.

"என் தம்பி! எப்பொழுது குறி சொல்ல ஆரம்பிப்பாங்க? இவர் சொல்வதெல்லாம் பலிக்கிறதா?" என்று கேட்டாள்.

"என்னம்மா! அப்படிக் கேக்கறீங்க, இன்னும் கொஞ்ச நேரத்தில் பாருங்க. என்ன கூட்டம் கூடப் போவுது?" என்றான் அப் பையன்.

"அப்படியா, எனக்குத் தெரியாது. நான் புதுசு, அதான் கேட்டேன்."

"எங்கிருந்தம்மா வரீங்க?"

"நான் டவுனிலிருந்து வ ரே ன ப் பா. இருட்டுவதற்குமுன் வீடு போய்ச் சேரவேண்டும். முடியுமா?"

"ஏன் முடியாது? நீங்க என்ன கேட்கப் போறீங்க?"

"ஒன்றுமில்லை. நம்ம வீட்டுக்காரர் உத்தியோக விஷயமாக வந்தேன்" என்று சொல்லி விட்டாள் சாரதாம்பாள். அந்த அம்மாள் கள்ளங் கபடற்றவள். நிஜத்தைத் தவிர வேறு எதுவும் சொல்லத் தெரியாது.

"அதற்கென்ன அம்மா. அம்மன் மகா வைச்சா வருது. பூசாரி ஐயா குறி சொல்வதைக் கேளுங்களேன். அப்படியே பிரமித்துப் போய்விடுவீங்க. உங்களை 'டக்'கென்று கூப்பிட்டுச் சொல்லி விடுவாரு. எலுமிச்சம் பழம், கற்பூரம், துட்டு எல்லாம் கொண்டு வந்திருக்கீங்களா?"

"எல்லாம் இருக்கப்பா" என்றாள் சாரதா. பையன் அவ்விடத்தை விட்டு நழுவினான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தாரை, தம்பட்டங்கள் முழங்கின.

பூசாரி மேல் சாமி வந்தது. உடனே அவர் சிஷ்யனிடம், "அப்பா, பக்தகோடிகள் வந்துவிட்டார்களா?" என்றார்.

"வந்துட்டாங்க" என்று பதிலளித்தான் சிஷ்யன்.

"அது சரி மகனே! இங்கிருந்து கிழக்குப் பக்கத்திலிருந்து ஒரு மகள் தன் புருஷன் ஜீவன விஷயமாக வந்திருக்குது. அதைக் கூப்பிடப்பா" என்று உத்தரவு கிளம்பியது.

"யாரம்மா அது? சீக்கிரம் வாங்க!" என்று மறு உத்தரவு போட்டான் சிஷ்யன்.

சாரதாம்பாள் சட்டென்று பூசாரி எதிரில் வந்து உட்கார்ந்தாள். உடனே பூசாரி ஆரம்பித்தார். "மகனே, உன் புருஷன் ஜீவன விஷயமாகத்தானே வந்திருக்கிறாய்?"

"ஆமாம்" என்று பதில் கிடைத்தது.

"மகனே, கனி கொண்டு வந்திருக்கிறாயா?" என்று கேட்டதும் முதலில் சாரதாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னம்மா! எலுமிச்சம் பழம் கொண்டு வரல்லே?" என்று அதட்டினாற்போல் கேட்டான் சிஷ்யன்.

"இதோ!" என்று எலுமிச்சம் பழத்தைப் பூசாரியிடம் கொடுத்தாள் சாரதா. அப்பொழுது அவள் கையில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. பழத்தை வாங்கிய பூசாரி அதை மூன்று தரம் ஊதிவிட்டு "இந்தா மகனே! இதைப் பெற்றுக் கொள். இக் கனியைப் பத்திரமாக வைத்துக் கொள். இக் கனியே உன் கணவனுக்கு வேலை கொடுக்கப் போகிறது. இக் கனியினால்தான் உன்னுடைய கஷ்டங்கள் தீரப்போகின்றன. கனி பத்திரம்!" என்று எலுமிச்சம் பழத்தை அவள் கையில் குங்குமப் பிரசாதத்துடன் கொடுத்தார்.

மிகவும் பக்தியுடன் அக் கனியைப் பெற்றுக் கொண்டாள் சாரதா. அவள் எழுந்திருக்கும் போது "அம்மா, எலுமிச்சம் பழம் பத்திரம். உண்டியில் காணிக்கை போட்டீங்களா?" என்றான் சிஷ்யன். "இதோ" என்று கூறிக்கொண்டே ஒரு காலணாவை உண்டியில் போட்டுவிட்டு எலுமிச்சம் பழத்தைப் பத்திரமாக மடியில் வைத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தாள்.

இது நடந்த மறுநாள் கணேசன் தம் வீட்டுத் திண்ணையில் தலையைச் சொறிந்து கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது தெருவில் ஒரு ராணுவ உத்தியோகஸ்தர் போய்க் கொண்டிருந்தார். அவரைப் பார்த்தால் வெயில் தாங்காமல் மிகவும் கஷ்டப்படுபவர் போலிருந்தது. அவர் கணேசன் வீட்டு வாசல் வந்த சமயம் அவர் கணேசனை வெறிக்கப் பார்த்துக் கொண்டே சென்றார். சிறிது நேரத்துக் கெல்லாம் அந்த ராணுவ உத்தியோகஸ்தர் திரும்பி வந்து கணேசன் வீட்டின் முன் நின்றார். கணேசனுக்குத் திடீரென்று பயம் வந்து விட்டது; பார்க்காததுபோல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார். ஆனால் அந்த ராணுவ உத்யோகஸ்தர் "டக் டக்" என்று பூட்ஸை சப்தப் படுத்திக் கொண்டு கணேசன் வீட்டில் நுழைந்தார். "அடே கணேசா! என்னைத் தெரியவில்லை யாடா உனக்கு?" என்று கேட்டார்.

அப்பொழுதுதான் கணேசனுக்குப் பயம் தெளிந்தது. வந்தவரை உற்றுப் பார்த்துவிட்டு "அடே பாலுவா? வா! அடையாளமே தெரியவில்லையே. நீ ஹாட்டும், பூட்ஸும், டிரஸ்ஸும் போட்டுக்கொண்டு பார்த்ததில்லை. மீசை வேறே. நீ என்ன வேலையில் இருக்கிறாய்?" என்று குசலம் விசாரித்தார் முதலியார்.

"நான் ஸப்ளை டிபார்ட்மெண்டிலே இருக்கேன். கணேசா! ரொம்ப தாகமாக இருக்கு. ஒரு டம்ளர் தண்ணீர் இருந்தால் கொடு" என்று கேட்டார் பாலு.



"பாலு, இந்தா! என்றும் ஆனது!"

"இதோ வந்துட்டேன் இரு. அவன் கூட வீட்டிலில்லை. இருந்தால் காப்பி போடச் சொல்லலாம்" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்ற முதலியார் ஒரு டம்ளரில் குளிர்ந்த ஜலமாக எடுத்து வந்தார். அப்பொழுது என்னமோ யோசனை தோன்றியது. உடனே அலமாரியைத் திறந்தார். சர்க்கரை டப்பாவிலிருந்து சர்க்கரையை அள்ளி ஜலத்தில் போட்டார். அவர் எதிரே ஒரு எலுமிச்சம் பழமும் கூடக் காட்சி யளித்தது. அதை எடுத்தார்; இரண்டாக வெட்டி டம்ளரில் பிழிந்தார். சாறு 'மடமட' வென்று கொட்டியது. ஒரு கலக்குக் கலக்கினார். "பாலு இந்தா! என்னால் ஆனது" என்று கூறிக்கொண்டே அதைக் கொடுத்தார்.

"அப்பா. இந்த வெயிலுக்கு பேஷான ஷர்பத் கொடுத்தாயே, ரொம்ப சந்தோஷம்" என்றார் பாலு.

நண்பர்கள் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு கணேசன் "பாலு! நம்மைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளப்பா. மறந்து விடாதே!" என்றார்.

"அட பைத்தியமே! நீ எனக்கு இதெல்லாம் சொல்ல வேண்டுமாடா?" என்று கூறி விட்டுச் சென்றார் பாலு.

* * *

சிறிது நேரத்துக்கெல்லாம், வெளியில் சென்றிருந்த சாரதா வீடு திரும்பினாள்.

"என்ன சாரதா, எங்கே போய்விட்டாய்? எத்தனை நாழிகையாகக் காப்பிக்குக் காத்துக் கொண்டிருப்பது? சிநேகிதன் ஒருவன் வந்தான். அவனுக்குக் காப்பி கொடுக்க முடியவில்லை. ஒரு டம்ளர் எலுமிச்சம் பழ ஷர்பத் செய்து கொடுத்தேன்" என்றார்.

"என்ன செய்து கொடுத்தீர்கள்? எலுமிச்சம் பழ ஷர்பத்தா? உங்களுக்கு எலுமிச்சம் பழம் ஏது?"

"அதான் அலமாரியிலே ஒன்று இருந்ததே, அதை எடுத்துக் கொண்டேன்."

"ஐயோ! அது தேவி பிரஸாதம்னு; அதைப் போய் எடுத்துட்டீங்களே. எல்லாம் போச்சு! நான் அந்தப் பழத்தை நம்பியிருந்தேன். இனி என்ன பண்ணுவேன்?" என்று அழ ஆரம்பித்து விட்டாள் சாரதா.

"சும்மா ஏன் அழறே? நீ எங்கிட்ட அதைப் பற்றி சொல்லவே இல்லையே? இப்பதான் என்ன குடி முழுகிப் போச்சு? கொடுக்கிற தெய்வமாயிருந்தால் தானே கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்.

வேணும்னு உனக்கு ஒரு மூட்டை எலுமிச்சம் பழம் வாங்கித்தரேன். அழாதே" என்று சமாதானம் செய்தார்.

இது நடந்து ஒருவாரமாயிற்று. ஊரிலும் வெயில் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது.

திடீரென்று ஒருநாள் பாலு கணேசனிடம் வந்து சேர்ந்தார். "கணேசா! ஒரு சமாசாரம் கேள். வெயிலோ அதிகமாக இருக்கிறது. இந்த ஊரில் தங்கி இருக்கும் ஸோல்ஜர்கள் வெயில் தாங்காமல் கஷ்டப்படுகிறார்கள். நீதான் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்றார்.

"என்ன பாலு, பரிகாசம் பண்ணுகிறாய்? வெயில் உன்னை முதலில் பிடித்துவிட்டாப் போலிருக்கிறதே. நான் அவர்களுக்கு என்னப்பா செய்ய முடியும்?" என்றார் கணேசன்.

"நான் சொல்வதைக் கேள். அன்று நீ எனக்கு எலுமிச்சம்பழ ஷர்பத் செய்து கொடுத்தாயே, ஞாபகம் இருக்கா?"

அவ்வளவுதான். கணேசனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. திண்ணையிலிருந்து 'தொப்' பென்று குதித்து பாலுவைக் கட்டிக் கொண்டார்.

அன்று சாயந்திரம் கணேசன் தம்பதிகளுக்குள் பின்வரும் சம்பாஷணை நடந்தது: "பார்த்தீர்களா, தேவியின் மகிமையை! அந்த எலுமிச்சம் பழத்தினாலே உங்களுக்கு வேலை கிடைக்கும் என்று அந்தப் பூசாரி சொன்னபடியே ஆகிவிட்டது. நான் செய்கிற காரியம் எதுவும் வீணாகாது."

"ஆமாம். காக்கை உட்கார்ந்ததும் பனம் பழம் விழுந்ததும் சரியாய்ப் போச்சு" என்றார் கணேசன்.

"எனக்குக் கொஞ்சம் கௌரவம் கொடுக்கிறதா யிருந்தால் உங்களுக்கு மனசே வரல்லை."

இவர்கள் சம்பாஷணை எப்படியானாலும் சரி, நாமெல்லாரும் ஊறுகாய்க்காக எலுமிச்சம் பழம் வாங்கப் பையை எடுத்துக் கொண்டு மார்க்கெட்டுக்குப் போனால் மருந்துக்கு ஓர் எலுமிச்சம் பழம் அகப்பட மாட்டேனென்கிறது. தப்பித் தவறி அகப்பட்டாலும் கைப்பட்ட விலை சொல்கிறார்கள். கேட்டால் ராணுவத்திற்கு 'லெமன் கிரஷ்' சப்ளைக்காக எல்லாம் போய் விடுகிறதாம்.

அதற்குக் காரணம் கண்டிராக்டர் கணேச முதலியார்தான்!

கர்நாடக சங்கீத வித்வான்கள்

ஆலங்கலம் வைத்தியநாத பாகவதர்

26. மாயூரம் வீணை வைத்யநாதய்யர்

இவர் இந்த வாத்தியத்தைப் பிராசீன சம்பிரதாயப்படி கையாண்டு வந்தவர். அக்காலத்தில் இந்த வாத்தியத்தை இந்தப் பிராந்தியத்தில் இவரைத் தவிர வேறு ஒருவரும் விசேஷமாகக் கையாளாததினால் இவருக்கு வீணை வைத்யநாதய்யர் என்ற நாமதேயம் உண்டாயிற்று.

கர்னாடக லக்ஷண ஞானத்தில் மிகவும் ஆழ்ந்த திறமை வாய்ந்தவர். மகாவைத்யநாதய்யர் முதலான பெரிய வித்வான்களுடன் பழகிச் சற்றேறக்குறைய சமமான கவுரவத்தை அடைந்து வந்தார். சில பிராசீன கர்னாடக வர்ணங்களையும் கிருதிகளையும் வீணையில் வாசிப்பதில் மிகவும் நைபுண்யம் பெற்றிருந்தார். இவருக்கு வைராக்ய நிதியான கோபால கிருஷ்ண பாரதி அவர்கள் முக்கிய சிநேகிதர். மேற்படியாருடைய கவிகளை வீணையில் உபயோகப் படுத்துவதில் இவருக்கு நிரம்பவும் அபிலாஷை உண்டு. திருக்கோடிகாவல் பிடில் கிருஷ்ணய்யரவர்களும் இவரும் சேர்ந்து ஜோடியாய் வாசிக்கும் பொழுது இரண்டும் ஒரே ஏகநாதமாய் விளங்கி ஜனங்களை ரஞ்சிக்கச் செய்யும்.

இவர் திருவாவடுதுரை ஆதீனத்தில் விசேஷ ஆதரவை அடைந்து கௌரவமாகக் காலம் கழித்தார். அந்த ஆதீனத்திற்கு முக்கியஸ்தரான வைணிக வித்வான். புதுக்கோட்டை சமஸ்தான திவானாக யிருந்த காலஞ் சென்ற கணபதி சாஸ்திரிகள் அவர்களுடைய பிதாமஹர் திருவாலங்காடு தியாகராஜ தீக்ஷிதர் இவருக்கு முக்கிய சிநேகிதராகையால் அடிக்கடி ஆதீனத்திற்கு சேர்ந்தாற்போல் வந்து ஜோடியாய்க் கச்சேரி செய்வதுண்டு. வீணையோடு சேர்ந்தாற்போல் இவர் பாடுவதும் உண்டு.

ஆனால் சாரீரம் அவ்வளவு உயர்ந்தது அல்ல. தாளப் பிரஸ்தாரத்திலும், விவகார விஷயத்திலும் கை தேர்ந்தவர். தனக்குச் சரியானபடி சாரீரம் இல்லாததினால் தன் முழு யோக்கியதையையும் பிரகடனப்படுத்த சாத்தியப்படவில்லை என்பதை உணர்ந்த இவர் தன் குமாரன் வீணை சபேசனை அஸகாய சூரனாகத் தயார் செய்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

27. உமையாள்புரம் நாராயண ஐயர் (கடம்)

கட வாத்யம் என்பது என்ன? அதை எப்படி உபயோகப்படுத்துகிறார்கள்? அது எவ்வளவு பரியந்தம் சங்கீதக் கச்சேரிகளுக்கு உபயோகமுள்ளது. என்பவைகளை இவர் மூலமாய்த்தான் நான் தெரிந்து கொண்டேன். இந்த வாத்தியத்தை இவருக்குமுன் யார் கையாண்டு வந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. பட்டணம் சுப்ரமணிய ஐயர் அவர்கள், திருக்கோடிகாவல் கிருஷ்ண ஐயர் முதலானவர்களின் கச்சேரியில் இவர் வாத்தியத்தை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். எப்படி மிருதங்கத்தில் வலந்தரை, தொப்பி என்று இரண்டு நாதங்கள் ஏற்பட்டிருக்கிறதோ அவ்விதம் அந்த இரண்டு நாதங்களையும் இந்தக் கடவாத்தியத்தில் காட்டி இவர் உயர்வாக வாசித்ததினால் இதுவும் மிருதங்கம்போல் ஒரு அவசியமான வாத்தியம்தான் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

இவர் உயர்ந்த சங்கீத ஞானமுடையவராகையால் இவர் கச்சேரிகளை போஷாக்கு செய்து வாசிப்பது குறிப்பிடத் தக்கதாகும். இதனாலேயே வித்வான்களும் இவர் வாத்தியத்தை விரும்புவதுண்டு. இந்த வாத்தியத்தில் மிருதங்கம் அப்பா, முதலானவர்கள் போல் மூன்று காலத்தையும் நிர்ணயமாகக் காட்டி "பரன்" முதலானதுகளோடு கூட வெளிப்படுத்தி ஜனங்களால் பெரிதும் புகழப்பட்டவர். அந்த உருப்படிகளுக்கும் சமகாலத்தை அமைத்துக் கொண்டு, மிருதங்கத்தின் 'டேகா' மாதிரி இவர் வாசித்துக்கொண்டு வருவது மிகவும் மெச்சத் தகுந்தது. தற்காலம் மிருதங்க வித்வான்களாக விளங்கும் ஸ்ரீ கோதண்டராமய்யர், ஸ்ரீ கணேசய்யர் இவ்விருவர்களுடைய பிதா இவர்.

உள்ளம் கவர் கள்வன்

[பொன்னம்மாள்]

மாலைச் சூரியனின் கிரணங்கள் பொன் மயமாய்ப் பிரகாசித்தன. அந்தச் சிறிய காட்டில் உள்ள துஷ்ட மிருகங்களும் தங்கள் தங்கள் மறைவிடத்தில் உறங்கிக் கொண்டிருந்தன. எங்கும் அமைதி பரவியிருந்தது.

அந்த நிர்மானுஷ்யமான காட்டில் ஓர் அடர்ந்த புதரின்பின் பதுங்கியிருந்த ஒரு மனிதன் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது யாரோ தூரத்திலிருந்து பாடிக் கொண்டுவரும் சப்தம் கேட்டது. அந்தச் சப்தம் வர வர சமீபித்துக் கேட்கவும் அவன் புதரின் பின்னால் இன்னும் நன்றாக மறைந்து கொண்டான். சட்டென்று பாட்டு நின்று, ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டது. உடனே அம்மனிதன் மெதுவாக வெளியில் வந்து பார்த்தான், அத்தனை நேரம் உல்லாஸமாகப் பாடிக் கொண்டு, நடந்து வந்த இளம் பெண்ணை தூரத்தில் ஒருவன் வழி மறித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். ஒளிந்து கொண்டிருந்த மனிதன் கோபங் கொண்டவனாய்ப் பாய்ந்தோடி வந்து அந்தத் துஷ்டனின் முதுகில் ஒரு குத்து விட்டான்.

எதிர்பாரா விதமாக அடி விழவே அவன் நிலை தவறிக் கீழே விழுந்துவிட்டான். பிறகு சமாளித்துக் கொண்டு எழுந்தான். ஆனால் தன்னிலும் பலசாலியான எதிரியைக் காணவே தன் ஜபம் சாயாது என்று அறிந்து கொண்டவுடன் அவனைக் குரூரமாக முறைத்துப் பார்த்து விட்டு அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டான். இவையெல்லாம் ஐந்தே நிமிஷத்தில் நடந்தேறி விட்டன. அந்தப் பெண் தன்னைக் காப்பாற்றியவனுக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவிக்கும் பார்வையுடன் அவனைப் பார்த்தாள்.

அவளுக்குச் சுமார் பதினெட்டு வயதிருக்கும்; மாநிறம். முகத்தில் ஒரு வசீகரம் இருந்தது. இயற்கையாக உள்ள தேக வளர்ச்சியினால் காட்டுக் கொடி போல் செழுமையாகத் தோன்றினாள். அவள் அணிந்திருந்த எளிய உடையினால் அவள் ஏழை என்று தெரிந்தது. அவளுக்குப் பக்கத்தில் கீழே விழுந்து கிடந்த ஒரு கூடையையும் தராசையும் கற்களையும் பார்த்தால் அவள் ஏதோ வியாபாரம் செய்கிறவள் என்றே தோன்றியது.

சில நிமிஷம் வரையில் இருவருக்கும் என்ன பேசுவதென்று தெரியவில்லை, பிறகு அவனே பேசலானான் :—

''அம்மா! உனக்குத் துணைக்கு ஒருவருமில்லையா?'' என்று கேட்டான். அந்த பெண் ஒரு புன்சிரிப்புடன், ''நான் தினமும் இந்த வழியாகத் தனியேதான் போவது வழக்கம்'' என்றாள்.

''உன்னைத் துன்புறுத்தியவன் யார்? உனக்கு அவனைத் தெரியுமா?'' என்று கேட்க அவள், ''அவன் எங்கள் ஊர் மிராசுதார். பணம்படைத்தவன். அவன் என்னென்ன அக்கிரமம் பண்ணினாலும் கேட்பாரில்லை என்று நினைத்திருந்தான்'' என்று ஆத்திரத்துடன் கூறினாள். பிறகு ''நீங்கள் இந்த ஊருக்குப் புதிதா?'' என்று அவனை விசாரித்தாள். ''ஆம்'' என்னும் பாவனையாக தலையை அவன் அசைத்து விட்டு ''நீ இன்னும் இங்கு இருந்தால் ஆபத்து, போகலாம் வா! நானும் உன்னுடன் காட்டைத் தாண்டும் வரையில் துணை வருகிறேன்'' என்றான். அந்தப் பெண் கீழே கிடந்த கூடையையும் தராசு படிக் கற்களையும் எடுத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள். கொஞ்ச நேரத்தில் அவர்கள் காட்டைத் தாண்டி ஊர்ப் பக்கம் அடைந்தனர்.

வழியில் அவன் அவள் வரலாற்றைத் தெரிந்து கொண்டான். அவள் பெயர் தேவானை. தாய் தந்தையரைச் சிறுவயதிலேயே இழந்துவிட்டாள். ஒரு பாட்டன்தான் அவளைக் காப்பாற்றி வருகிறான். கிழவனுக்கு ஒரு சிறிய தோட்டமும், குடிசையும்தான் சொத்து. தினந்தோறும் தோட்டத்தில் விளையும் காய் கறிகளையும் பூக்களையும் விற்று அதன் வரும்படியால்தான் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். கிழவன் பலஹீன மடைந்து விட்டதால், அவளுக்குத் துணையாக வரமுடிவதில்லை. உள்ளூரில் விற்பதைக் காட்டிலும், காட்டிற்கு மறு புறமுள்ள புளியூரில் அதிக லாபம் கிடைப்பதால், அவள் அங்கு போய் விற்று வந்தாள். கா

டைச்சுற்றிக் கொண்டு போனால் வெகு நேர மாவதால் காட்டிற்குள் போகும் குறுக்கு வழியே போவது வழக்கம். ஆனால் அந்த வழியில் ஜன நடமாட்டம் மிகக் குறைவு.

இருவரும் வயற்காட்டைக் கடந்து ஒரு சிறிய ஆற்றங்கரையை அடைந்த னர். ஆற்றுக்கு அக்கரையில் சிறிது தூரத்தில் வீடுகள் தென்பட்டன. அவனைத் தங்கள் வீட்டிற்கு வந்து போகும்படி தேவானை கூப்பிடவே அவனும் கூடப் போனான்.

தனிமையான ஒரு தோட்டம். அதைச் சுற்றிலும் முள் வேலிகள் அடர்த்தி யாகக் கட்டப்பட்டிருந்தன. தோட் டத்தில் தென்னை மரங்களும் சில மா மரங்களும் இருந்தன. காய்கறிச் செடி களும் பூஞ்செடிகளும் பயிராக்கப் பட்டிருந்தன. நடுவில் குடிசை. இரு வரும் தோட்டத்திற்குள் நுழைந்த வுடன், குடிசையின் வாசலில் நின்றி ருந்த கிழவனைப் பார்த்தார்கள். தேவா னையைக் கண்டதும் அவன் ஆவலுடன், "ஏன் அம்மா இவ்வளவு நேரம்? பொழுது போயிடுச்சே, நீ இன்னும் வரவில்லையே என்று எண்ணுததெல் லாம் எண்ணிவிட்டேன்" என்றான். அப்பொழுது அவள் பின்னுலிருக்கும் அன்னியனைக் காணவும் வியப்பினால் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

தேவானை காட்டில் நடந்ததைச் சொல்லி, "இவர்தான் என்னைக் காப் பாற்றினார்" என்று தன்னுடன் வந்த வனைக் காட்டினாள். கிழவன் மிகவும் நன்றியறிதலுடன் அந்த ஆசாமியைப் பார்த்தான். "அந்தப் பாவி என்னைப் இம்சை பண்ணுகிறது போதாதென்று இவளையும் உபத்திரவம் செய்ய வந்து விட்டானே. தெய்வம்தான் அவனைக் கேட்க வேண்டும்" என்று கண்ணீர் விட்டான். பிறகு இருட்டிவிட்டதால் அந்தப் புதிய ஆளை அங்கேயே தங்கி விட்டுப் போகும்படி உபசரித்தான். அந்த ஆள் அந்தப் பக்கத்திற்குப் புதி தாகையால் அதற்கு இணங்கினான்.

இரவு சாப்பாடானதும் மூவரும் குடி சைக்கு வெளியில் வந்து உட்கார்ந்தனர். கிழவன் விருந்தாளியிடம் அவனைப் பற்றிய விவரங்களை மெதுவாக விசாரித் தான். அவன் தன் பெயர் அழகப்பன் என்றும் தனக்கு உலகத்தில் உறவினர் ஒருவருமில்லை யென்றும் ஊரூராய்த் திரிந்து வயிற்றுப் பிழைப்புக்காக எந்த வேலை கிடைத்தாலும் செய்து காலங் கழிப்பதாகவும் சொன்னான். அவனுக் குப் படிக்கத் தெரியும். இவ்வுலகில் ஜனங்கள் ஏழ்மையால் படும் கஷ்டமும் அக்கிரமங்களும் அவனை மனித சமூகத் தையே வெறுக்கும்படி செய்துவிட்டன. மனித சாகவாசமே இல்லாத இடத்தில் வாசம் செய்ய விரும்பிக் கால்போன வழி நடக்கிறான்.

இதைக் கேட்ட கிழவனுக்குத் தன்னை யறியாமல் அவன்மேல் அன்பும் அனுதா பமும் உண்டாயிற்று. "அழகப்பா, நீ இந்த வயசிலேயே உலகத்தை வெறுத்துவிட்டாயே. உன்னைப் பார்த் தால் ரொம்ப அலைந்து திரிந்திருப்பாய் என்று தெரிகிறது. உனக்குச் சம்மத மானால் எங்க வீட்டிலேயே கொஞ்ச நாள் இரு. எனக்கும் தேவானைக்கும் ரொம்ப சந்தோஷமா யிருக்கும்" என்றான். அழகப்பன் முதலில் ஒப்புக் கொள்ளா விட்டாலும் கடைசியில் சம்மதித்தான்.

அழகப்பன் வந்து இரண்டு நாட் களாயின. அவன் யாருடனும் அதிக மாய்ப் பேசுவதில்லை. தனியாக உட் கார்ந்துகொண்டு ஏதோ யோசித்துக் கொண்டிருப்பவன் போலிருந்தான். கிழவனுக்குப் பொழுது போகாத சம யம் அவனுடன் வலியப்பேசுவான். பகல் வேளையில் குடிசையைவிட்டு வெளியே வரமாட்டான். இருட்டின பிறகு சில சமயம் தோட்டத்தில் சுற்றுவான். வீட்டை விட்டு ஒரு தடவை கூட வெளியே போக அவன் விரும்பவில்லை. ஒரு நாள் தேவானை காய்கறிகளை எடுத் துக் கொண்டு விற்கப் புறப்பட்டாள். அழகப்பனை அவள் ஜாடையாகப் பார்த்தபொழுது அவன் வேறு பக்க மாகத் திரும்பிக் கொண்டு பேசாமலிருக் கவே அவள் முகம் ஏமாற்றத்தைக் காட்டிற்று.

அன்று சாயங்காலம் தேவானை திரும்பி வந்தபோது கிழவனும் அழகப்பனும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் கூடையை வைத்து விட்டு அவர்களிடம் ஓடிவந்து "தாத்தா, தாத்தா, விஷயம் கேட்டாயா? கொள்ளைக்கார ஆறுமுகத் தேவன் ஜெயிலிலிருந்து ஓடிப்போய் விட்டானாம். அவனைத் தேடிக்கொண் டிருக்கிறார்களாம்" என்று படபடப் புடன் சொன்னாள். இதைக் கேட்டதும் கிழவன் முகம் பயத்தால் வெளுத்து விட்டது. அவன் அழகப்பனிடம் "அப்பா, அவனைப்பத்தி உனக்குத் தெரி யுமா? அவன் பேர்பெத்த கொள்ளைக் காரன். அவன் பேரைக் கேட்டாலும் எல்லாருக்கும் நடுக்கம்தான். எங்கே


யாவது அந்தப் பாவி மகன் இங்கே வந்து வைக்கப் போகிறான்" என்று நாக்குழறச் சொன்னான்.

கிழவனது பயத்தைக் கண்ட அழகப்பன் "நீங்கள் பயப்படாதீர்கள்" எப்பேர்ப்பட்ட திருடனானாலும் நான் ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று சொன்னான். "நீங்கள்தான் ஏழையாயிற்றே. ஏன் பயப்பட வேண்டும்?" என்று கேட்டான். உடனே கிழவன் கண்களைச் சிமிட்டியபடி குடிசைக்குள் அவர்களை அழைத்துக் கொண்டு போய் வாயிற் கதவைத் தாளிட்டான். பிறகு சாமான் வைக்கும் சிறிய அறைக்குள் சென்று அங்கு ஒரு மூலையில் கிடந்த உடைந்த பெட்டிக் கடியில் தரையைத் தோண்டி ஒரு மண் கலயத்தை எடுத்து வந்து அவர்களுக்குக் காட்டினான். தேவானையும் அழகப்பனும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கிழவன் கலயத்திலிருந்து பணத்தை வெளியிலெடுத்துச் சரியாக ஐம்பது ரூபாய்களை எண்ணிக் கலயத்தில் போட்டு மூடிப் பழையபடி அதே இடத்தில் புதைத்துவிட்டு வந்து, "நான் ஏன் பயப்பட்டேன்? இப்போ தெரிஞ்சுதா? வயத்தை வாயைக் கட்டிச் சேர்த்த பணமிது. என் மகன் வியாதியாகப் படுத்துக் கிடந்த பொழுது இந்தத் தோட்டத்தையும் வீட்டையும் மிராசுதார் பொன்னம்பலத்திடம் கொதுவை வைத்து ஐம்பது ரூபாய் வாங்கினேன். அந்தப் பாவி என் வாயிலே மண்ணைப் போட்டுட்டுப் போயிட்டான். அவன் ஜீவனுக்கு தேவானை தான் ஒருத்தி இருக்காள். இவளைத் தவிர எனக்கு ஒருத்தரும் இல்லை. இந்த தோட்டத்தையும் வீட்டையும் தேவானைக்குச் சீதனமாகக் கொடுக்கணும்னு எனக்கு ஆசை. வட்டியும் முதலுமாக நூறு ரூபாய் கொடுக்கணும். பொன்னம்பலம் செத்து விட்டான். அவன் மகன் மருதாசலம் என்னைத் தொந்தரவு செய்கிறான். நாமோ தனியாக இருக்கிறோமே. அந்தத் திருடன் வந்தா என்ன பண்ணுகிறது என்று எனக்கு பயம்" என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்.

தேவானை ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றாள். தனக்குக் கூட இதுவரையில் சொல்லாமல் ரகசியமாக வைத்திருந்த அந்தப் பணத்தை உணர்ச்சியின் வேகத்தால் தன் பாட்டன் முன் பின் அறியாத ஒருவனுக்குக் காட்டியதை நினைக்க அவள் பெரிதும் பயமும் ஆச்சர்யமுமடைந்தாள்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் சாயங்காலம் இருட்டும் சமயம் அழகப்பன் தோட்டத்தின் பின் பக்கம் போனான். அங்கே மறு நாளைக்கு வேண்டிய காய் கறிகளைத் தேவானை பறித்துக் கொண்டிருந்தாள். அழகப்பனைக் கண்டதும் புன்சிரிப்புடன் அவனை வரவேற்று அவனுடன் பேசலானாள்.



...... கலயத்தை எடுத்து வந்து காட்டினான்.

நடுவில் அழகப்பன் வேதனை நிறைந்த குரலில், "தேவானை, நீயும் உன் பாட்டனும் என்னத்திற்காக என் மேல் இவ்வளவு பிரியமாயிருக்கிறீர்கள்? இவ்வளவு பிரியம் காண்பிப்பதால் தானே, இந்த இடத்தை விட்டுப் போவதற்கே மனம் வரவில்லை?" என்றான். "எங்களை விட்டு எதற்காகப் போக வேண்டும்?" என்று தேவானை கேட்கும்போது அவனுக்குத் துக்கம் தாங்கவில்லை. குனிந்த வாறே காய்களைப் பறித்துக் கொண்டிருந்த தேவானை அழகப்பன் குடிசைக்குள் போவதைக் கண்டு நிமிர்ந்து நின்றாள். அப்பொழுது பின்னாலிருந்து யாரோ கூப்பிடும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கவும் முன் வேலிக்குப் பின்னால் மிராசுதார் மருதாசலம் நின்றிருப்பதைக் கண்டாள். அவள் கோபத்துடன் அவனை எரித்து விடுகிறவள் போல் பார்த்தாள்.

"அதோ போகிறானே அவன் யார்?" என்று அழகப்பன் போன திக்கைக் காட்டிக் கேட்டான் மருதாசலம்.

"யாரா யிருந்தால் என்ன?" என்று தேவானை கேட்டு விட்டு 'டக்'கென்று அந்த இடத்தை விட்டுக் குடிசைக்குப் போனாள். மருதாசலம் சில நிமிஷம் அங்கே நின்று பிறகு போய்விட்டான்.

இரவு நடுநிசியில் யாரோ பலமாகக் கதவை இடிப்பதைக் கேட்டுக் கிழவன் பயத்துடன் விழித்துக் கொண்டான். கொள்ளைக்காரன்தான் வந்து விட்டானோ என்னும் கலவரத்தால் அழகப்பனைக் கூப்பிட்டான். பதிலில்லை. கதவைப் பின்னும் பலமாகத் தட்டும் சப்தத்தால் தேவானை விழித்துக் கொண்டு விளக்கை யேற்றிக் கொண்டு அறையிலிருந்து வெளியில் வந்தாள். அழகப்பனைக் காணவில்லை. ஆனாலும் தேவானை தைரியமாகப் போய்க் கதவைத் திறந்தபோது மருதாசலத்துடன் நாலைந்து போலீஸ்காரர்கள் ஆயுதபாணிகளாய் நின்றிருப்பதைக் கண்டாள். அவர்கள் ஆறுமுகத் தேவன் அங்கே ஒளிந்து கொண்டிருப்பதாகக் கேள்விப் பட்டதாகவும் அவனைப் பிடித்துக் கொண்டு போக வந்திருப்பதாகவும் சொன்னார்கள். தேவானையின் பின்னாலேயே வந்த கிழவன் அதைக் கேட்டு குய்யோ முறையோ என்று கத்த ஆரம்பித்தான். கோபத்தினால் காளியைப் போல் தோன்றிய தேவானை எல்லோரையும் சுட்டெரிப்பவள் போல விழித்துப் பார்த்து "உள்ளே போய்ப் பாருங்கள்" என்று கதவை அகலத் திறந்தாள். போலீஸ் புலிகள் அச் சிறிய குடிசை

யின் மூலை முடுக்குகளெல்லாம் தேடியும் ஒருவரையும் காணவில்லை. பிறகு தோட்டம் பூராவும் தேடினார்கள். அங்கும் ஆறுமுகத் தேவன் காணாமற் போகவே அவர்கள் அனாவசியமாகத் தங்களை அலைக்கழித்ததற்காக மருதாசலத்தைத் திட்டிவிட்டுப் போனார்கள்.

கிழவன் அவர்கள் போய்விட்டதை அறிந்து பரபரப்புடன் மண் கலயம் புதைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தைத் தோண்டிப் பார்க்க மண் கலயம் அப்படியே இருந்தது. அதை விளக்கு வெளிச்சத்தில் கொண்டு வந்து பார்க்க அதில் ஒரு காகிதம் இருப்பதைக் கண்டான். பணத்தைக் கீழே கொட்டி எண்ணிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! சரியாக நூறு ரூபாய் இருந்தது. பிறகு காகிதத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் ஏதோ எழுதியிருந்ததால் தேவானையிடம் அதைக் கொடுத்தான். அதில் எழுதி யிருந்தது:

பெரியவரே!

நான்தான் ஆறுமுகத் தேவன். நான் கொள்ளைக்காரனாகப் போனதைப் பற்றி ஒன்றும் சொல்லுவதற் கில்லை. என்னைப்போல் துர்ப்பாக்கியன் இந்த உலகத்திலேயே இருக்க மாட்டான். என்னைக் கண்டாலும் என் பெயரைக் கேட்டாலும் உலகம் வெறுக்கிறது. ஆனால் உங்கள் கபடமற்ற பிரியம் என்னைப் புது மனிதனாக்கி விட்டது.

இந்தப் பணத்தைக் கொண்டு தோட்டத்தையும் வீட்டையும் மீட்டு தேவானைக்குச் சீதனமாக உங்கள் பிரியம்போல் கொடுக்கவும். இது கொள்ளை யடித்த பணமென்று நினைக்க வேண்டாம். நான் என் கைகளால் வேலை செய்து சம்பாதித்தது. தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

இப்படிக்கு,
ஆறுமுகத் தேவன்.

கிழவன் இதைக் கேட்டு ஸ்தம்பித்து விட்டான். "ஐயோ பாவம்" என்ற சொல் அவனை யறியாமல் வாயிலிருந்து வந்தது. தேவானை சிலைபோல் அசையாமல் நின்றிருந்தாள். தன் உள்ளத்தைக் கவர்ந்து சென்ற கள்வனை நினைத்து மனமுருகினாள். அவன் எழுதிய கடிதத்தை வைத்துக் கொண்டு மனதிற்குள் திருப்பித் திருப்பிப் படித்தாள். அப்பொழுது அவள் கண்களிலிருந்து சிந்திய கண்ணீர் இவ்வுலகத்தையே சிறிது நேரம் மறைத்தது.



எல்லோரும் ஓர்குலம். இது இந்தியாவின் பரம்பரையான உரிமையே, மற்ற ஆசிய நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் உள்ள வேற்றுமை இதுதான். இதை இழக்க நாம் விரும்புவோமா? எல்லாவித தத்துவங்களுக்கும் இடம்தரும் தனிப்பெருமை நம் நாட்டிற்கே உரியது. நாலந்தா, பூரி, திருக்கோயி லடக்கியேயும், ஸ்ரீ அரவிந்த மகரிஷி ஆஸ்ரமத்தையும், அடையாற்றையும் சாந்திநிகேதனத்தையும் சற்று சிந்தித்துப் பாருங்கள்! ஜப்பானியர் வந்தால் இவையெல்லாம் அழிந்துபோகுமே!

குருதேவ சொல்வதைக் கேளுங்கள் :—

“மண்டையோடுகளின்மேல் எழுப்பப்படும் ஆசியாவையே நிர்மாணம் செய்ய நீங்கள் (ஜப்பானியர்) பார்க்கிறீர்கள். மனிதவர்க்கத்தை அழிப்பதில் தன் திறமையைக்கண்டு மகிழும் நாசவேலைக்குக் களிப்பூட்டத்தக்க செய்கைகளுடன் உங்கள் செய்கைகளும் ஒப்பிடத்தக்கவை என்ற செய்தியை உங்களுக்கு அனுப்புபவன் என்று நான் கனவிலும் கருதவில்லை. உங்கள் கடிதத்தில் காணும் கொள்கை (ஆசியா, ஆசியருக்கே என்பது) ராஜீயக் கொள்கைக்காரரின் ஆயுதமென்றே கருதுகிறேன். அதில் நான் வெறுக்கும் ஐரோப்பிய எண்ணங்களே மலிந்திருக்கின்றன. சாதுப்பரிவுகள், தேசங்கள் முதலிய குறுகிய எல்லைக்குட்படாத 'எல்லோரும் ஓர்குல'மென்னும் உன்னத மனிதசமூக லக்ஷியம் அதில் கொஞ்சங்கூட இல்லை.”—

ஜப்பானியக்கவி யோநேசிக்கு ரவீந்திரநாத் தாகூர் எழுதிய “கவியிடமிருந்து கவிக்கு” என்ற கடிதத்தில்.

சர்வநாசத்துடன் ஜப்பானிய சேனைகள் வரும்போது, 'ஜப்பானிய அராஜகமும், ஈனங்களும், தெய்வத்தன்மை போனவை'; ஆகவே அவர்களைக் கண்டுபிடித்தாலும் வணங்கவேண்டும். இதைத்தான் வேறெதையும் போதிக்கக்கூடாது.

> இப்பொழுதே குருதேவரின் “மேலான மனிதசமூக”க் கொள்கையைப் பின்பற்றுங்கள். சொந்த இலட்சியங்களைத் தியாகம் செய்யுங்கள். ஜப்பானியர் நம் நாட்டில் நுழையாமல் தடுக்க, உங்களாலான உதவியை,—பிரிட்டிஷாருக்குக் கூட,—செய்யுங்கள்.

நீங்களே யோசித்துப்பார்த்து

ஒன்றுபட்டு உழையுங்கள்!

அதுதான் தேசியப் போர்முனை

CPU 8 F.TM

மலிவான சர்க்கரை

"தூமிலன்"

இந்தக் கலிகாலத்தில் சில தகப்பனார்கள் இருக்கிறார்கள்! அவர்களுக்குக் கொஞ்சங் கூடத் தங்கள் பிள்ளைகளின் சௌகரியத்தைக் கவனித்து நடந்து கொள்ளத் தெரிவதே இல்லை. மளிகைக் கடை தனகோடி செட்டியார் இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர். அவர் தம் பிள்ளை ராமானுஜத்துக்கு பீ. ஏ. பரீக்ஷை நடக்கும் சமயமாயிற்றே என்பதைக் கொஞ்சங்கூட லட்சியஞ் செய்யாமல் ஒரு நாள் திடீரென்று காலகதியாகி விட்டார்.

இதன் பயனாய் ராமானுஜம் சென்னையை விட்டுத் தன் ஊருக்குப் போகும்படியாயிற்று. சடங்குகள் முடிந்ததும் அவன் சென்னை திரும்பிவிடலாமென்று தான் இருந்தான். ஆனால் ஊரில் குடும்ப விஷயங்களையும், தகப்பனார் நடத்தி வந்த மளிகைக் கடையையும் கவனித்துக் கொள்ளப் பொறுப்புள்ள ஆசாமி யாரும் இல்லாததால் அவன் தாயார் அவனை ஊரிலேயே இருக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

ராமானுஜம் காலேஜிலிருந்தபோது பொது உடைமைக் கொள்கை சம்பந்தமான நூல்களைப் படித்து ஒழிந்த வேளைகளில் பாட புத்தகங்களையும் ஒரோரு சமயம் படிப்பதுண்டு. ஆகையால், "தாயார் சொற்படி நடக்கவேண்டும்" என்று எங்கேயோ படித்ததாக ஞாபகம் வரவே அவன் ஊரிலிருந்து கடையை நடத்த ஒப்புக் கொண்டான்.

ராமானுஜம் (பரீட்சைக்கு ஆஜராகாத) பீ. ஏ. மளிகைக் கடையில் போய் உட்கார்ந்து வியாபாரத்தைக் கவனிக்க ஆரம்பித்தான். கணக்குகளைப் புரட்டிப் பார்த்தபோது அவன் தகப்பனார் சாமான்களை அநியாய லாபத்துக்கு விற்று வந்திருக்கிறார் என்று தெரிய வந்தது. பொது உடைமை நூல்களைப் படித்துப் புரட்சி மனப்பான்மையடைந்திருந்த அவனுடைய மனதுக்கு இப்படி லாபம் சம்பாதிப்பது மகா பாவம் என்று தோன்றிற்று. உடனே அவன் குமாஸ்தா மாணிக்கம் பிள்ளையைக் கூப்பிட்டு "நம்ப சர்க்கரை மூட்டை தருவிக்கும்போது வீசை என்ன விலை அடங்கிற்று?" என்று விசாரித்தான்.

"வீசை ஐந்தரை அணா" என்று பதில் வந்தது.

"இப்பொழுது என்ன விலை விற்கிறோம்?"

"பத்தணா இரண்டு தம்பிடி."

"பத்தரை அணா ...... இல்லையா?"

"ஆமாங்க! பொட்டணம் கட்டுகிறோமே, அந்தக் காகிதத்துக்காக நாலு தம்பிடி சேர்த்துப் பத்தணா ஆறு தம்பிடிக்கு விற்கிறோம்."

"இது அநியாயம்!" என்று ராமானுஜம் பெருமூச்சு விட்டான்.

"அநியாயந்தான். பழைய காகித விலை வீசை இரண்டரை ரூபாய் விற்கிறபோது காகிதத்தை நாலு தம்பிடிக்குக் கொடுக்கிறது நஷ்டந்தான். நாளை பிடிக்கப் பொட்டணத்தின் விலையை ஆறு தம்பிடி ஆக்கி விடலாமா!" என்றான்.

"மாணிக்கம்! நீங்கள் எல்லாம் போன ஜன்மத்திலே பகற் கொள்ளைக்காரராக இருந்திருக்க வேண்டும். நான் சர்க்கரை விலையே அதிகம் என்கிறேன். நீ பொட்டணத்துக்கு வேறே இன்னும் விலையை உயர்த்தச் சொல்கிறாயே!"

மாணிக்கம் பதிற் சொல்லவில்லை. அவனுடைய விழிகள் ஆச்சர்யத்தால் அகன்று பெரிதாயின.

"நாம் சர்க்கரை வரவழைத்தபோது வீசை ஐந்தரை அணா அடங்கிற்று. அரை அணா லாபம் வந்தால் போதும். ஆகையால் இனிமேல் நம்ம கடையில் ஆறணாவுக்குத்தான் விற்க வேண்டும்" என்று ராமானுஜம் சொன்னான்.

இதைக் கேட்டு மாணிக்கத்தின் விழிகள் இன்னும் அகன்றன. ராமானுஜம் சொன்னதை அவனால் நம்பவே முடியவில்லை. தன் காது உணர்ச்சியுடனிருக்கிறதா என்று பார்க்கக் காதைக் கிள்ளிவிட்டுக் கொண்டான். காதில் சப்தம் விழுகிறதா என்று பார்க்கச் சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தின் சப்தத்தைக் கவனித்தான். டக், டக் என்ற சப்தம் சரியாக விழுந்தது.

மாணிக்கம் பதில் சொல்லாமலிருப்பதைக் கண்ட ராமானுஜம் "என்ன யோசனை பண்ணுகிறாய்? போய் ஒரு அட்டையும் வர்ணப் பென்சிலும் எடுத்துக்கொண்டு வா" என்றான். மாணிக்கம்

இயந்திரம்போல் நடந்து சென்று அட்டையையும் பென்ஸிலையும் எடுத்துக்கொண்டு வந்தான்.

"நான் சொல்வதை எழுது! சர்க்கரை விலை விசை ஆறு அணு......" என்று ராமானுஜம் சொன்னான்.

"அப்படி ராம்ப மத்தவங்களை விடக் குறைச்சு விக்கறது நல்லா இருக்காதுங்க" என்றான் மாணிக்கம்.

"ஏன்? ரூபாய்க்கு ரூபாய் லாபம் வைத்து விற்றால்தான் நன்றாயிருக்குமாக்கும்?"

"இல்லே, நேத்து வரை பத்தணவுக்கு வித்துப்பிட்டு இன்னிக்குத் திடீரென்று குறைத்தால் நாலு பேர் என்ன சொல்வாங்க?"

"அது யாரு அந்த நாலு பேர்?"

"ஊர் உலகம் என்ன சொல்லுங்கறேன்? வியாபாரம் பண்ணத் தெரியலேனு சிரிக்க மாட்டாங்களா!"

"அப்புறம்!"

"பயித்திரக்காரன்னு சொல்வாங்க."

"உனக்கு இன்றோடு என்ன சம்பளமாகிறது? கணக்குப் பாரு!" என்று ராமானுஜம் சொல்லவே மாணிக்கம் வாய் பேசாமல் அட்டையில் எஜமான் சொன்னபடி பின்வருமாறு எழுதினான்:—

சர்க்கரை விலை
விசை அரு 0-6-0

அதை எழுதி முடித்தபோது அவன் கண்களில் நீர் அரும்பிற்று.

அன்று இரவு மாணிக்கம் வீட்டுக்குப் போனபோது அவன் மனைவி அவன் முகத்தைப் பார்த்துப் பயந்து போய் விட்டாள். "என்ன உடம்பு? வைத்தியரை இட்டு வரச் சொல்லவா?" என்று பரிதவித்தாள்.

"அநியாயம்! அநியாயம்! அநியாயம்!" என்று மாணிக்கம் முனகினான்.

"என்னென்னமோ சொல்றீங்களே! கோட்டாங்கச்சி அம்மனுக்கு முடிஞ்சு வைச்ச காசை எடுத்துக்கிட்டு ஸினிமா பாத்த குற்றந்தான் உங்களை இப்படி பேசச் சொல்லுது. அம்மா பரதேவதை! நீதான் காப்பாத்த வேணும்" என்று சொல்லி ஓடிப்போய் ஒரு டப்பாவிலிருந்து விபூதியைக் கொண்டுவந்து நெற்றியில் இட்டு வாயிலும் போட்டாள்.

மாணிக்கத்துக்குக் கோபம் வந்து விட்டது. "தா! தா!" என்று துப்பிக்கொண்டே "இந்தா! அரிசிமாவை ஏன இப்படி வீணக்கறே? எனக்கு ஒண்ணுமில்லே. காலேஜிலே பெரிய பரீச்சை பாக பண்ணிட்டு வந்திருக்கானே, செட்டியாரு மகன், அவனுக்குத்தான் பயித்தியம் பிடிச்சுப் போயிடுத்து. கடையிலே சாமான் எல்லாம் அதிக லாபத்துக்கு விற்றால் பாபமாம். இவர் வந்து விலையைக் குறைச்சுப் புண்ணியம் சம்பாதிக்கப் போறாராம், புண்ணியம்" என்றான்.

"என்ன சொல்றாரு?"

"சர்க்கரை விலையைக் குறைச்சுப்பிட்டாரு. நாளையிலேயிருந்து எங்க கடையிலே சர்க்கரை விலை விசை 0—6—0."

அவள் சிரித்து விட்டு "உங்களுக்கு வர வரக் காது செவிடாய்ப் போயிடுத்து. நான் சொல்றதே சில சமயம் காதிலே விழுறதில்லேயே. அந்தப் பையன் சொல்றது காதிலே எங்கே சரியாக விழுந்திருக்கப் போறது?" என்றாள்.

"சத்தியமாய்ச் சொல்றேன். இந்தக் கையாலே நானே 0—6—0 என்று நோட்டீசு எழுதினேன். உடனுடத்த கடைக்காரங்க பத்தரை அணவுக்கு விக்கறபோது நாம் இப்படி விற்றா சிரிக்க மாட்டாங்க."

"பிள்ளையாண்டான் அப்பன் பேரைக் கெடுத்தாட்டுப் போய் விடுவான்போலிருக்கு. நீங்க அந்தக் கடையிலே வேலை பார்க்கிறீங்கனு சொல்லிக்கக் கூடஎனக்கு இன்னமே அவமானமாயிருக்கும்" என்றாள் மனைவி.

வேலையை விட்டு விடலாமா என்று கூடச் சதிபதிகள் யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலை ராமானுஜத்தின் கடை வாசலில் சர்க்கரை விலையைப் பற்றிய நோட்டீஸ் தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தவர்கள் வெள்ளைக் காக்கையைப் பார்ப்பது போல் பார்த்துக்கொண்டு நின்றார்கள். சிலர் தங்கள் கண்களை நம்பாமல் கசக்கிக் கசக்கிக் கொண்டு பார்த்தார்கள்.

"சர்க்கார் சர்க்கரையை ஒரு காவிரி ஸ்நானத்துக்கு விற்கச் சொல்லி உத்தரவு போட்டிருக்காப்பலே இருக்கு" என்றார் ஒரு சாஸ்திரிகள்.

"நான் பேப்பரிலே பார்த்தேன். விலை ரெட்யூஸானதைப் பற்றி ஒரு ஆர்டரும் பப்ளிஷ் பண்ணலே என்றார்" ஒரு பென்ஷன் ஆஸாமி.



கூட்டம் அதிகரிக்கவே போலீஸ் அதிகாரிகள் வந்துவிட்டார்கள்......

"அதென்னமா ஸார், நமக்குத் தெரியாமல் குறையும்? நாம் சர்க்கரை கண்ட்ரோலர் ஆபீஸிலிருக்கிறோமே" என்றார் மூன்றாவது பேர் வழி.

"சர்க்கரை வீசை 0-10-2 தம்பிடிக்கு விற்று வந்ததை 0-6-0 விதம் விற்றால் ஒரு மணங்குக்கு ரூ. 2-7-0 நஷ்டம் ஆகுமே" என்று ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் சொன்னார்.

"இந்தக் கடையில் மட்டுந்தான் இப்படி விலை குறைத்துப் போட்டிருக்கிறது. மற்றக் கடைகளில் எல்லாம் பழைய விலைதான்" என்றார் இன்னொருவர்.

"அப்படியானால் சட்டுப்புட்டென்று நாம் வாங்கிவிட வேண்டும்" என்று சொல்லிப் பத்துப் பதினைந்து பேர் கடை வாசலில் கூடினார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத் தெரு முழுதும் கூடிவிட்டது.

ராமானுஜம் கடையில் தனது ஆசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தான். தன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல், குறைந்த அளவு லாபத்துக்குச் சர்க்கரை விற்பதில் அவனுக்குப் பரம திருப்தி ஏற்பட்டிருந்தது. மாணிக்கமோ லக்ஷ ரூபாய் ஆஸ்தியை இழந்துவிட்டவன்போல் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அப்பொழுது இரண்டு பேர் மிகவும் இரகசியமாகப் பேசிக் கொண்டே வந்தார்கள் :—

"ஏன் ஸார்! இந்த மனுஷன் இவ்வளவு மலிவாய் விற்பானேன்? எனக்கு ஒரு சந்தேகம். சர்க்கரை ரொம்ப மட்டச் சர்க்கரையாயிருக்குமோ!"

"இருக்கலாம். ஒரு வேளை கெட்டுப் போனதாயிருந்தாலும் இருக்கலாம். விஷம் பட்டுப் போச்சோ என்னமோ யார் கண்டார்கள்? எதற்கும் அதில் கொஞ்சம் மாதிரிக்குத் தின்று பார்த்தால் நல்லதல்லவா?" என்று சொல்லிக் கொண்டே வந்து கொஞ்சம் சர்க்கரையை அள்ளி வாயில் போட்டுக் கொண்டார்.

ஏற்கெனவே அவருக்குச் சர்க்கரையைப் பற்றிப் பலத்த சந்தேகமேற்பட்டிருந்ததால் அதைத் தின்றதும் தலை சுற்றுவதுபோலிருந்தது. தம்மை யாரோ ஆகாய விமானத்தில் தூக்கிக் கொண்டு சப்த சாகரங்களையுங் கடந்து சர்க்கரை மலையில் கொண்டு போய் விட்டதாக உணர்ந்தார். மறு நிமிடம் ஒரு தட்டாமாலை சுற்றிக் கீழே விழுந்தார். அதைக் கண்டதும் கடை வாசலில் பெரிய கூட்டம் கூடிவிட்டது.

"நான் அப்பொழுதே சொன்னேனே ஏதாவது இருக்கும் என்று?"

"இல்லா போனால் வீசைக்கு நாலணா குறைத்து விற்கப் பயித்தியக்காரத்தனமா?"

"ஒரு வேளை திருட்டுச் சர்க்கரையாயிருக்கலாம்!"

"ஜப்பான்காரன் இரகசியமாகக் கொடுத்து விற்கச் சொல்லியிருக்கலாமோ என்னமோ?"

இவ்வாறு கூட்டத்திலிருந்து விமர்சனங்கள் கிளம்பின. தெருவில் கூட்டம்

அதிகரிக்கவே போலீஸ் அதிகாரிகள் வந்து விட்டார்கள்.

"சர்க்கார் உம்மை வீசை பத்து அணு நாலு தம்பிடிக்கு விற்கச் சொல்லியிருக்கும்போது உம்மை யாரையா குறைந்த விலைக்கு விற்கச் சொன்னது?" என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"அந்த விலைக்கு மேலே விற்கக்கூடாதென்று உத்தரவேயொழிய குறைத்து விற்கக் கூடாதென்று உத்தரவில்லை" என்று ராமானுஜம் பதிலளித்தான்.

"என்ன ஐயா! எனக்கா சட்டம் சொல்லிக் கொடுக்கிறாய்? போலீஸ் ஸ்டேஷனுக்கு வாரும், உம்மை சாவகாசமாக விசாரிக்கணும்" என்று இன்ஸ்பெக்டர் சீறி விழுந்தார்.

ராமானுஜம் ஸ்டேஷனுக்குப் போனான். அங்கே அவன் நடந்ததை உள்ளது உள்ளபடி சொன்னாலும் அதிகாரிகள் அவன் கூறியதை நம்பவில்லை. அவனுக்குப் பொது உடமைக் கொள்கைகளில் பற்று உண்டென்று அறிந்ததும் அவர்கள் சந்தேகம் அதிகமாயிற்று.

ஆனால் அவன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள யாதொரு ருசுவும் இல்லாததால் அவனைச் சரியான விலைக்கு விற்கும்படி எச்சரித்து அனுப்பி விட்டார்கள்.

சர்க்கரையைத் தின்று கிறே விழுந்த ஆசாமி சாப்பிடும் நேரம் மட்டும் எழுந்திருந்து சாப்பிட்டுவிட்டு மற்ற வேளைகளில் மயக்கமாய்ப் படுத்துக் கொண்டிருந்தார். அது என்ன வியாதி என்று வைத்தியர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஆகவே சர்க்கரை மூட்டைகளில் ஏதாவது விஷம் சம்பந்தப்பட்டிருக்கக் கூடுமென்று சந்தேகப்பட்டுப் போலீஸார் அவற்றை ஸீல் போட்டு வைத்திருக்கிறார்கள். சர்க்கரை நல்ல சர்க்கரைதானா என்று நிபுணர்கள் பரிசோதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையே ராமானுஜத்தின் கடையில் வழக்கமாய்ச் சாமான்கள் வாங்கி வந்தவர்கள் பயந்துபோய் வேறு கடைகளில் பற்று வரவு செய்ய ஆரம்பித்தார்கள். ராமானுஜம் வெறுமனே கொடுத்தால் கூட இப்பொழுது அவன் கடையில் சாமான்கள் வாங்க யாரும் வருவதில்லை.

இப்படிப்பட்ட பயித்தியக்கார ஊரில் இருப்பதைவிட எங்கேயாவது போய்ச் சந்நியாசியாய்க் காலங் கழிப்பது நல்லதென்று ராமானுஜத்துக்குத் தோன்றிற்று. ஆனால் சர்க்கார் "அவசியமானபோது மட்டும் பிரயாணஞ் செய்யுங்கள்" என்று சொல்வதால், அவன் "சந்நியாசியாகப் போவதற்கு ரயில் பிரயாணஞ் செய்யலாமோ கூடாதோ?" என்று சந்தேகப் பட்டுக்கொண்டு இருக்கிறான்.

சர்க்கார் அதிகாரிகளோ சாமான்களை நிர்ணய விலைக்குக் குறைவாக விற்பதனால் குழப்பம் ஏற்படுவதால் குறைந்த விலைக்கு விற்கக்கூடாதென்று சட்டம் போடுவதைப் பற்றிப் பலத்த யோசனை செய்து கொண்டிருப்பதாகக் கேள்வி!

கவிச்சித்திர விளக்கம்

உறையூருக்கு வடக்கே, ஏதோ பத்து மைல் தூரத்தில் ஒரு சிறு ஊர். அந்த ஊரிலுள்ள ஒரு பெண் உறையூருக்கு வந்து போவது வழக்கம். வந்தால், காவேரியில் குளிப்பாள். தண்ணீரிலுள்ள வாளை மீன்கள் கரையில் மெள்ள மெள்ள ஏறி, அகப்பட்ட இரையைக் கவ்விக்கொண்டு பிறழ்ந்து, தண்ணீருக்குள் மறுபடியும் விழுந்துகொள்ளும். இந்த வளத்தையெல்லாம் பார்த்து அனுபவித்தவள் அவள். இந்த வளமான இடத்தில் ஒரு நாள் சோழ மன்னன் நீராட வந்தான். அவனைப் பார்த்துக் காதல் கொண்டுவிட்டாள் பெண். பிறகு தன் ஊருக்கும் போய்விட்டாள். அங்கேயுள்ள குளத்துக்கு ஒரு நாள் நீராடப் போனாள் அவள். வட திசையிலிருந்து பறந்து வந்த ஒரு நாரை குளத்தில் இறங்கி நின்றது. பெண் எண்ணுகிறாள்: நாரை சிறிது நேரத்தில் குளத்தை விட்டுக் கிளம்பித் தெற்கேயுள்ள உறையூருக்குப் போகும், என்பதாக.

[மடநாராய்: அழகிய நாரையே. தென் உறந்தை சேறியேல்: தெற்கேயுள்ள உறையூருக்குச் செல்வாயானால். நின் கால்மேல் வைப்பன் என் கையிரண்டும்: உன் காலைப் பிடித்துக் கும்பிடத் தயார். வன்பால் கரை உரிஞ்சி மீன் பிறழும்: தேகத்தின் வலிமை காரணமாகக் கரையின் மேல் உராய்ந்து, உராய்ந்து ஏறிய மீனானது மறுபடியும் நீரில் விழுந்து விடுகிற. வன்பு: மீனின் தேகக் கொழுப்பு. காவிரி நீர் நாடற்கு: சோழனுக்கு. நோய்: காதல் நோய்.]

குறிப்பு:—காதலுற்ற பெண் தோழியைப் பார்த்துப் பேசினாள் என்றால் சாமான்ய உண்மை. நாரையைப் பார்த்துப் பேசினாள் என்னும்போது, பிரமாதமான வேகம் உண்டாய் விடுகிறது காதலுக்கு.



செங்கால் மடநாராய்!
தென்உறந்தை சேறியேல்,

நின்கால்மேல் வைப்பன்என்
கையிரண்டும்: வன்பால்க்

கரைஉரிஞ்சி மீன்பிறழும்
காவிரிநீர் நாடற்(கு),-

உரையாயோ யான்உற்ற
நோய்.

கவிச் சித்திரம்—10. —முத்தொள்ளாயிரம்.



சிரிக்கும் வாத்து

[ராஜி]

காசி தேசத்து அரசனுக்கு மிகவும் அழகான பெண் ஒருத்தி உண்டு. அவளுக்கு வயது இருபது ஆகியும் எப்பொழுதும் எந்தக் காரியத்திற்கும் சிரித்துக் கொண்டே இருப்பாள். அவள் கண்களிலிருந்து ஒரு துளி கூடத் தண்ணீர் வந்தது கிடையாது. அரசனும் தன் பெண்ணைச் செல்வமாக வளர்த்து வந்தான்.

ஒரு நாள் காசி தேசத்திலுள்ள ஒரு பெரிய மந்திரவாதி அரண்மனைக்கு வந்தான். அரசன் அவனை வரவேற்று அவனுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மந்திரவாதிக்குத் தாகத்தால் திடீரென்று விக்கல் எடுத்தது. அச்சமயத்தில் பக்கத்திலிருந்த அரசகுமாரி மந்திரவாதியைப் பார்த்து 'ஹி ஹி ஹி' என்று பெரிதாகச் சிரித்தாள்.

அரச குமாரியைப் பார்த்த மந்திரவாதிக்குக் கோபம் வந்தது. அரசகுமாரியின் குணத்தை அறியாத மந்திரவாதி அவள் தன்னை அவமானப் படுத்தியதாகவே நினைத்தான். அப்பொழுது அவன் கண்களில் தீப்பொறி பறந்தது. முன்பின் யோசியாமல் "ஏ அரசகுமாரியே! நீ இன்று முதல் ஒரு சிரிக்கும் வாத்தாக மாறுவாய்" என்று சபித்தான்.



அரசன் மந்திரவாதியின் காலில் விழுந்தான். "மந்திரவாதியே! அவள் எப்பொழுதும் சிரித்துக் கொண்டே தான் இருப்பாள். ஆகையால் அவள் சிரித்ததைத் தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம்" என்று சமாதானம் சொன்னான்.

மந்திரவாதியும் ஒருவாறு சமாதானமடைந்தான். "அரசே! நான்



சாபம் கொடுத்தது கொடுத்ததுதான். ஆனால் அரசகுமாரியின் கண்களிலிருந்து யாராவது கண்ணீர் வரச் செய்துவிட்டால் அவள் சுயரூபத்தை அடைவாள்" என்று மந்திரவாதி சொல்லிவிட்டு அரண்மனையை விட்டுச் சென்றான்.

மந்திரவாதி சென்றவுடன் அரசனுக்கு எதிரில் அரசகுமாரிக்குப் பதிலாக ஒரு வாத்து நின்றது. அவ்வாத்து சிரித்துக் கொண்டு அரசனைச் சுற்றிச் சுற்றி வந்தது. அரசனுக்கு வாத்தைப் பார்க்கப் பார்க்கத் துக்கம் அதிகரித்தது.


மந்திரவாதி சொல்லியது போல் அரசன் தன் பெண்ணின் கண்களிலிருந்து யார் தண்ணீர் வரச் செய்கிறார்களோ, அவர்களுக்குத் தன் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுப்பதாகவும் ராஜ்யத்தில் பாதி தருவதாகவும் தண்டோரா மூலம் அறிவித்தான்.


பல அரச குமாரர்கள் வாத்தின் கண்ணில் நீர்வரச் செய்கிறோமென்று முன் வந்தார்கள். ஆனால் ஒருவராலும் முடியவில்லை. வாத்து அழுதால்தானே அதன் கண்களிலிருந்து தண்ணீர்வரும்? அதுதான் எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருக்கிறதே!

ஒருநாள் அரசன் சபையில் வீற்றிருக்கும் பொழுது அரச குமாரியான சிரிக்கும் வாத்து மெதுவாக அரசனை விட்டு நகர்ந்து ஒருவருக்கும் தெரியாமல் சமையலறைக்குச் சென்றது.

அங்கே பரிசாரகன் வெங்காயம் உரித்துக்கொண்டும் கண்ணை அடிக்கடி கசக்கிக் கொண்டும் உட்கார்ந்திருந்தான். அவன் வாத்தை "இந்தா! இந்த வெங்காயங்களைச் சற்று உரித்துக் கொடு. உனக்கு நிரம்ப வெங்காய சாம்பார் செய்து தருகிறேன்" என்றான். 'ஹி ஹி ஹி' என்று சிரித்துக் கொண்டே வாத்து வெங்காயத்தை உரிக்கப் பார்த்தது. ஒரு வெங்காயத்தைக் கால்களால் பலமாக அழுத்தவே, அதன் கண்களிலிருந்து வெங்காயக் காரத்தினால் தண்ணீர் வர ஆரம்பித்தது. தண்ணீர் வந்ததுதான் தாமதம், அடுத்த நிமிஷம் சிரிக்கும் வாத்து அரச குமாரியாக மாறிச் சுயரூபத்தை அடைந்தது!

அரசன் தன் பரிசாரகனுடைய சாமர்த்தியத்தைக் கேட்க மிகவும் சந்தோஷமடைந்தான். தன் இராஜ்யத்தில் ஒரு பங்கை அவனுக்குக் கொடுத்ததல்லாமல் தன் பெண்ணை அவனுக்குக் கலியாணமும் செய்து கொடுத்தான்.




Insist on
CAUVERY BRAND
காவேரி பிராண்ட்
Cauvery
BRAND
BLEACHING
POWDER
It's
INDIAN
MADE
THE METTUR CHEMICAL AND
INDUSTRIAL CORPORATION LTD.
METTUR DAM, SOUTH INDIA

உடைந்த வளையல்

[து. ரா.]

முதல் அத்தியாயம்

அந்தத் தபால்காரன் அந்த ஊருக்குப் புதிதாய் வந்தவன்.

அவன் நடையைப் பார்த்தாலே அவன் ஊருக்குப் புதிது என்பது தெரியும். ஒவ்வொரு தெருவின் பெயரையும் ஜாக்கிரதையாய்க் கவனித்துப் பார்த்துக் கொண்டே நடந்தான். அடிக்கடி கையிலுள்ள காகிதக் கட்டிலிருந்த கடிதங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பான். வீடுகளின் நம்பர்களையும் பார்ப்பான். சந்தேகம் வந்துவிட்டால், தெருவில் போகிறவர்களையோ, அல்லது வீட்டு வாயிலில் காணப்படுகிறவர்களையோ அணுகி, கடிதத்தைக் காண்பித்து அது எந்த வீட்டுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று விசாரிப்பான். தெரு முழுவதையும் கடந்து சென்ற பிறகு, கையிலுள்ள கடிதம் எதையாவது பார்த்துவிட்டு, அந்த நம்பருள்ள வீடு தெருவின் மூலையில் அல்லவா இருக்க வேண்டும் என்று மறுபடியும் வந்த வழியே திரும்பி முணுமுணுத்துக் கொண்டே நடப்பான்.

பாவம், தபால்காரன் வேலை கஷ்டமான வேலைதான். மணியோ பத்தரை. மண்டை வெடித்து விடும்போல் வெயில் காய்கிறது. தோளிலிருந்து கனமான தபால் பை தொங்குகிறது. கை நிறையக் கார்டுகளும், கவர்களும், மணியார்டர்களும், ரிஜிஸ்டர்களும், பார்ஸல்களும் இருக்கின்றன. வெயிலில் தெருத் தெருவாய் நடந்து அவ்வளவையும் வீடு வீடாய்ச் சேர்த்தாக வேண்டும். போதாத குறைக்குப் புது ஊருக்கு மாற்றப்பட்டால் தபால்காரன் வீடு தெரியாமல் படுகிற அவஸ்தையை வேறு சொல்ல வேண்டியதில்லை.

அதுவும் சாந்தி நகரிலுள்ள வீடுகளுக்கு வரும் கடிதங்களைப் பட்டுவாடா செய்யும் வேலை உண்மையிலேயே மிகவும் சிரமமானது. நகர் பூராவும் புது மாடலில் 'டவுன் பிளானிங்' சட்டப்படி கட்டப்பட்ட பங்களாக்கள். ஒவ்வொரு பங்களாவையும் சுற்றி ஒரு தோட்டம். சில தோட்டங்கள் மிகப் பெரியவை. கேட்டைத் திறந்து கொண்டு அரை பர்லாங்கு தூரம் மோட்டார் பாதையின் மேல் நடந்து பங்களாவை அடைய வேண்டும். நம் புதுத் தபால்காரனுக்குக் கடவுள் சற்று உயரமான சரீரத்தையாவது கொடுத்தாரா? அதுவும் இல்லை. ஐந்தடிக்கும் கம்மியாகவே இருந்தான். ஒவ்வொரு பங்களா கேட்டையும் திறப்பதற்குள் அவனுக்கு மேல் மூச்சு வாங்கிற்று. உடல் பூராவும் வியர்த்து விட்டது. "இந்தப் பாழும் ஊரிலே தூக்கிப் போட்டாங்களே! எத்தனை நாள் இங்கே அவஸ்தைப் படுகிறது? ஒரு நாளைக்குள் இப்படி பேஜாராயிட்டுதே, தினம் எப்படி இங்கே தள்ளப் போகிறோம்? —" என்று நினைத்துக் கொண்டான்.

கையிலிருந்த கடிதத்தின் விலாசம் "ஸ்ரீமதி சுசீலா, சாந்தி விஹார்" என்றிருந்தது. தபால்காரன் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். கேட்டிலிருந்து பங்களாவுக்குப் போக அழகான கப்பிக் கல் பாதை போடப்பட்டிருந்தது. பாதையின் இரண்டு ஓரங்களிலும் மூன்றடி உயரத்தில் வெட்டி விடப்பட்ட அடர்த்தியான சவுக்குப் புதர். அதற்குப் பின்னால் பல விதமான புஷ்பச் செடிகள். ரோஜா, நந்தியாவட்டை, காசித் தும்பை, செம்பரத்தை, அரளி, குண்டுமல்லி முதலிய புஷ்பங்கள் பூத்திருந்தன. ஆனால் கருமமே கண்ணாக இருந்த தபால்காரன் பாதையின் நேர்த்தியையோ, புஷ்பங்களின் அழகையோ கவனிக்கவில்லை. பாதை எவ்வளவுக்கெவ்வளவு அழகாக வளைந்து சென்றதோ அவ்வளவுக்கவ்வளவு அது அவன் எரிச்சலை அதிகப்படுத்திற்று.

பங்களா எதிரில் போய் நின்று "ஸார், தபால்!" என்றான்.

உற்ற் — என்று ஓர் உறுமல் சப்தம் கேட்டது. பின்னோடு வள் வள்—என்று குரைத்துக் கொண்டு ஒரு நாய் உள்ளேயிருந்து வெளியே பாய்ந்து வந்தது.

"சும்மா இரு; சும்மா இரு" என்றான் தபால்காரன் உள்ளூர சற்று பயத்தோடு.

அதே சமயத்தில் "ஏ ரோஸ்! வா இங்கே!" என்று ஓர் அதட்டும் குரல்

உள்ளே யிருந்து கேட்டது. நாய் தன் மொட்டையான வாலையும் காதுகளையும் தழைத்து ஒடுக்கிக் கொண்டு, உடலை அசைத்துக் கொண்டே மறுபடி உள்ளே சென்றது.

“ஸார், தபால்!” என்று மறுபடி தபால்காரன் குரல் கொடுத்தான்.

உள்ளே, ஹாலில் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஓர் இளைஞன் மேஜை எதிரில் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு கால்களைத் தூக்கி மேஜைமேல் போட்டுக்கொண்டு ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். ஹாலில் இன்னொரு கோடியில், தோட்டத்தை நோக்கியபடி இருந்த ஜன்னல் எதிரில் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, முதல் நாள் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தாள் ஓர் யுவதி. தபால்காரன் குரலைக் கேட்டதும் அந்த இளைஞன் அந்தப் பெண்மணியின் பக்கம் திரும்பிப் பார்த்தான். ஆனால் அவளோ ஒன்றும் காதில் விழாதவள் போல் பத்திரிகை படிப்பதிலேயே கவனமாய் இருந்தாள். இளைஞன் தலையை அசைத்துக் கொண்டு மறுபடியும் கையிலிருந்த புஸ்தகத்தைப் புரட்டினான்.

தபால்காரன் பொறுமை இழந்தவனாய் “தபால்!” என்று மூன்றாம் முறை கூப்பிட்டான்.


இளைஞன் மறுபடி அந்த யுவதியின் பக்கம் திரும்பிப் பார்த்தான். அவள் சிறிதும் அசைந்து கொடுக்காதபடியால் புஸ்தகத்தை மேஜைமேல் வைத்து விட்டுத்தானே எழுந்திருந்து வெளியே வந்து கடிதத்தை வாங்கினான். வாங்கியவன் அதன் மேலிருந்த பெயரை உரக்கப் படித்தான், “ஸ்ரீமதி சுசீலா!” என்று படித்துவிட்டு, “இது என்னுடையது இல்லை” என்று சொல்லிக் கடிதத்தைத் தபால்காரன் கையிலேயே வைத்துவிட்டுத் தன் இடத்துக்குப் போய் உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுதுதான் அந்த யுவதியின் உடலில் சுரம் வந்ததுபோல் காணப்பட்டது. விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள். பிறகு சட்டென்று பத்திரிகையைக் கீழே போட்டு விட்டு விடுவிடென்று நடந்து போய்க் கடிதத்தை வாங்கிக் கொண்டு வந்து கம்பீரமாய் உட்கார்ந்து கொண்டாள்.

தபால்காரன் திரும்பி வந்த வழியே நடக்கும்போது, “அதிசயமாகத்தான் இருக்குது! அம்மாவுக்கு வந்த கடுதாசியை ஐயா வாங்கமாட்டாராம்; ஐயாவுக்கு வந்ததை அம்மா வாங்கமாட்டாளாம்! ஐயோ சாமி, நல்ல கூத்து இது! உலகமே தலை கீழாத்தாம் போவுது! நல்ல ஊருக்கு வந்து மாட்டிக்கினோம்!” என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

* * *

ஸ்ரீமதி சுசீலா உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்தாள். அடுத்த நிமிஷம், “அப்பா வருகிறாராம், பத்துப் பதினைந்து நாளிலே!” என்று சந்தோஷத்தோடு கத்தினாள். தன் கணவன் ஒன்றையும் கவனியாமல் புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் வெட்கத்துடன் உதட்டைக் கடித்துக்கொண்டு எழுந்திருந்து அவனிடம்



வந்து மேஜைமேல் கடிதத்தை வைத்தாள். அப்பொழுதும் அவள் கணவன் தங்கமணி தலையை நிமிரவில்லை.

"இந்தக் கடிதத்தைக் கொஞ்சம் படித்துத்தான் பாருங்களேன்."

"உனக்கு வந்த கடுதாசை எனக்கு ஏன் காட்டுகிறாய்?"

"எனக்கு வந்த கடுதாசி இல்லை. அந்தக் கவரிலேயே உங்களுக்கும் ஒரு லெட்டர் எழுதி வைத்திருக்கிறார்."

சுசீலா மறுபடி தன் நாற்காலியில் போய் அமர்ந்தாள். தங்கமணி கடிதத்தைப் படித்தான்.

"என்ன எழுதியிருக்கிறார் உங்களுக்கு? வருகிறேன் என்று தானே எழுதியிருக்கிறார்? வேறு ஏதாவது எழுதியிருக்கிறாரோ?" என்றாள் சுசீலா.

தங்கமணி கடிதத்தை நிதானமாகப் படித்தான். படித்து விட்டு, "கொஞ்ச நாழிக்குமுன்னால் யாரோ சொன்னார்கள், இனிமேல் என்



னுடன் பேசவே போகிறதில்லை என்று; இப்பொழுது பேசுகிறது யாரோ தெரியவில்லை" என்றான்.

"ஆமாம், பேசினா! நீங்க பண்ணுகிறதெல்லாம் மட்டும் ரொம்ப சரியான காரியம் போலே இருக்கிறது."

"ஏன், நான்தானே உன்னைப்போல் உர்ரென்று வேட்டை நாய் மாதிரி கோபித்துக் கொள்ளுகிறேன் எதற்கெடுத்தாலும்?"

"நான் கோபித்துக் கொள்கிறது மட்டும்தானே தெரிகிறது உங்களுக்கு? நீங்கள் பண்ணுகிறதெல்லாம் எங்கே தெரிகிறது?"

"நான் தான் என்ன பண்ணிவிட்டேனும் அப்படி? சாயங்காலம் சினிமாவுக்குப் போகலாம் என்றாய். பீச்சுக்குப் போவோம் என்று நான் சொன்னேன். உனக்கு அது பிடிக்கவில்லை. சரி, நீ சினிமாவுக்குப் போ, நான் பீச்சுக்குப் போகிறேன் என்றுதான் சொன்னேனே, நீ சினிமாவுக்குப் போவதை யார் வேண்டாம் என்றார்கள்?"

"ஆமாம், நான் மாத்திரம் தனியாக சினிமாவுக்குப் போகிறதாக்கும்? தனியாய்ப் போகத் தெரியாமல்தான் உங்களைக் கூப்பிட்டேனா என்ன? தினம் தான் ஆபீஸ் இருக்கிறது; ஏழு மணி எட்டு மணிக்குத் திரும்பி வருகிறீர்கள், எங்கேயும் போக முடிகிறதில்லை. ஞாயிற்றுக்கிழமை வீட்டிலிருக்கிறீர்களே, சேர்ந்து போகலாம் என்று சொன்னேன். இன்றைக்கென்று உங்களுக்கு என்னமோ பீச்சின் மேல் ஆசை அதிகமாய்ப் போய் விட்டது" என்று தலையைக் குனிந்துகொண்டே சொன்னாள் சுசீலா.

தங்கமணி அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"அப்படி யென்று முன்னமே சொல்கிறதுதானே? என்னவோ சினிமா பார்க்க ஆசைப்படுகிறாயாக்கும் என்று நீ வேண்டுமென்றால் போ என்றேன் —"

"ஏன், உங்களுக்கு மட்டும் சினிமா பார்க்கப் பிடிக்காதோ? பிடிக்காவிட்டாலும் எனக்காக இன்றைக்கு ஒரு நாள் வரக் கூடாதாக்கும்."

"எனக்குச் சினிமா பிடிக்காது என்று யார் சொன்னார்கள்? தினம் தான்

நாள் முழுதும், காலை 9 மணிக்குப் போனால் ராத்திரி 7 மணி வரையில் ஆபீஸிலே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்காவது காற்றாட வெளியே போவோம் என்றுதான் பார்த்தேன்.—சரி ஸினிமாவுக்குத்தான் போனால் போகிறது" என்றான்.

சுசீலா வெற்றிச் சிரிப்புடன் எழுந்திருந்து அவனிடம் ஓடிவந்தாள். "அதை முன்பே சொல்கிறதுதானே? அதெல்லாம் முடியாது; இப்பொழுது ஸினிமாவுக்குப் போகலாம் வா என்றால் நான் வருவேனா என்ன? நான் பீச்சுக்குத்தான் போகப் போகிறேன்" என்றாள்.

தங்கமணி அவள் கன்னத்தில் லேசாக ஒரு தட்டுத் தட்டி "போயும் போயும் இந்த அசட்டைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டேனே!" என்றான்.

"உம்; என்னைத் தான் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று உங்களை யாராவது பலவந்தம் பண்ணினார்களா என்ன? நீங்களே பார்த்துத் தானே பண்ணிக் கொண்டீர்கள்?"

"அப்பொழுது நீ அசடாய் இருப்பாய் என்று எனக்கு ஜோசியம் தெரியுமா? அதெல்லாம் இப்பொழுதுதானே தெரிகிறது?"

சுசீலா மறுபடியும் பத்திரிகையை எடுத்துப் பிரித்துக்கொண்டே அவனைக் கடைக் கண்ணால் நோக்கினாள்.

"ஏன், இப்பொழுதுதான் என்ன; வேண்டுமானால் சமத்தாய் இருக்கிறவளால் ஒருத்தியைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறதுதானே? யார் வேண்டாமென்கிறார்களாம்!"

"அடே அப்பா, என்ன தாராளம்! அப்படி ஒருத்தி நிஜமாகவே வந்து விட்டால், அந்தக் கண் பார்வையினாலேயே அவளைப் பொசுக்கிவிட மாட்டாயா?"

சுசீலா வெட்கத்துடன் தலையைக் குனிந்துகொண்டு "உங்களோடு யார் பேசுவா?" என்றாள்.

அன்றையப் பொழுது இப்படிக் கழிந்தது. (தொடரும்)





காலக்ஷேபம்

நிறைந்திருந்தது

ஸுந்தரன்:—ஏண்டி, கமலம்! நேற்று இரவு நாடகக் கொட்டகை முழுதும் நிறைந்திருந்ததாமே?

கமலம்:—ஆம், நல்ல மழை பெய்து கொட்டகை முழுதும் முழங்கால் ஜலம் நிறைந்திருந்தது.

—டி. என். சுந்தரராஜன்.

* * *

தெரியாதது

எஜமானன் (வேலைக்காரனைப் பார்த்து):—நீ ஏன் இவ்வளவு நேரங் கழித்து வந்தாய்?

வேலைக்காரன் :—தாங்கள் இன்றைக்கு இவ்வளவு சீக்கிரமாக வருவீர்களென்று எனக்குத் தெரியாது.

—ஜி. கே. ராமன்.

* * *

பிரமாதமில்லை

ரயில்வே பிளாட்பாரத்தில் சாம்பார் சாதப் பொட்டணம் வாங்கிய ஒருவர், சாதத்தில் எறும்புகள் நிறைய இருக்கதைப் பார்த்து, "என்ன, ஐயா! சாதத்தில் எறும்பு நிறைய இருக்கிறதே?" என்றார்.

ஹோ:—எறும்பு ஒன்றும் பிரமாதமாகச் சாதத்தைத் தின்று விடாது, ஸார்!"

—எஸ். சுந்தரராஜன்.

* * *

மணி என்ன?

மாடு திருடிய கைதி :—அண்ணே! ஒங்க கடியாரத்திலே இப்போ மணி என்ன?

கடிகாரம் திருடிய கைதி :—பால் கறக்கிற நேரம் ஆவுது, தம்பி!

—டி. ஏ. அப்பாசாமி.

* * *

தாராளம்!

மகன் :—அப்பா! நேற்று எனக்கு நீ ஒரு ரூபாய் கொடுத்தாப் போலே சொப்பனங் கண்டேன் ......

தந்தை (கருமி) :—நீ நல்ல பையன்; அதைச் செலவழித்து விடாதே!

—எஸ். எஸ். சிவம்.

எது பொய்?

ராமு :—நான் 'டெலஸ்கோப்'பால் இருபது மைல் தூரம் பார்க்க முடியும்.

சோமு :—இதுதானா பிரமாதம்! நான் என் கண்ணாலேயே 93,000,000 மைல் தூரம் பார்ப்பேனே!

ராமு :—ஏண்டா, இப்படிப் பொய் சொல்றே?

சோமு :—சரி, சூரியன் எவ்வளவு தூரம்?

—கே. பி. மணியன்.

* * *

அவர் கொடுத்தது

முத்து :—ஏண்டா வேணு, உனக்குக் கல்யாணம் நடந்ததாமே, முதலாளி என்ன கொடுத்தார்.

வேணு :—இரண்டு நாள் லீவு கொடுத்தார்.

—கே. நரசிம்மன்.

* * *

பொருத்தமே!

உபாத்தியாயர் :—நல்ல புத்தியுள்ள மாணாக்கர்கள் ஒரு கோபமுள்ள உபாத்தியாயரிடம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுவார்கள்.


மாணாக்கர் :—எங்களைத் தங்கள் எதிரிலேயே வைத்துக்கொண்டு இம்மாதிரி புகழ்வது எங்களுக்கு வெகு லஜ்ஜையாக இருக்கிறது.

—கே. ஷண்முகம்.

* * *

விற்கப் போவதில்லை

முதல் குடியன் :—நான் சமுத்திரத்தை விலைக்கு வாங்கப் போகிறேன்.



இரண்டாவது குடியன் :—எனக்கு அதை விற்பதாக அபிப்பிராயம் இல்லை.

எம். என். பட்டாபிராமன்.

வெஜிடபில் கதம்ப ஊறுகாய்



★

வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்காய், கீரைத்தண்டு, வாழைத்தண்டு. கத்தரிக்காய், பச்சை மிளகாய், பச்சை மிளகு - சொல்லும்போதே வாயில் ஜலம் ஊறுகிறது - முதலியவை சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜாமிருதமாகத் தயாரிக்கப்பட்டது. வாய்க்கு வெகு ஜோர். உடம்பிற்கு பரம சுகம். இன்றே உங்கள் தேவைக்கு எழுதவும். இரு சைஸ்களில் கிடைக்கும்.

★

டி. எஸ். ஆர். அண்டு கோ.,

வாஸனை திரவிய வியாபாரிகள்,

கும்பகோணம்.

மதராஸ் சோல் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

ஸ்டாக்கிஸ்டுகள் :

சுவாமினாதய்யர் அண்டு சன்ஸ்.,

புதுக்கோட்டை

சாரதா ஸ்டோர்ஸ்

காரைக்குடி

மெஸர்ஸ். சண்டிகா அண்டு கோ.,

முதல் அக்ரஹாரம், சேலம்

தங்கச் சங்கிலி

[வி. ஜி.]

பிரசித்தி பெற்ற சென்னைக் கடற்கரையிலே, ஒரு நாள் நானும் எனது நண்பன் இஸ்மாயிலும் உட்கார்ந்திருந்தோம். வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றி நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, பேச்சு வாக்கில், "தண்ணீருக்குக் கூடப் பஞ்சமாயிருக்கும் இந்த நாளிலே, எனது மனைவி தங்கச் சங்கிலி வேண்டுமென்று கேட்கிறாள். என்னத்தைச் செய்வது?" என்று நான் அவனிடம் சொல்லி அலுத்துக் கொண்டேன்.

இதைக் கேட்டதும், அவனுடைய முகம் மாறுதலடைந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு, அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு, "தங்கச் சங்கிலியா, தங்கச் சங்கிலி!" என்று ஏளனத்துடன் சொன்னான். அவன் சொன்ன மாதிரியிலிருந்தே இஸ்மாயில் ஏதோ கதை சொல்லப் போகிறான் என்று நான் ஊகித்துக் கொண்டேன். அவன் சொன்னான்:

1

"நான் சிறுவனாக இருந்தபோதே சிங்கப்பூருக்குப் போய்விட்டேன். காரணம், நான் அப்பொழுது தாய் தந்தையற்ற அநாதையாயிருந்ததுதான். என்றைக்காவது ஒரு நாள் போயே போய் விடப் போகும் இந்த உயிரின்மீது எனக்கிருந்த ஆசையால்தான் நான் அந்த யுத்தத்திற்குப் பயந்து திரும்ப வேண்டி வந்தது. சென்னைத் துறைமுகத்தை வந்தடைந்தபோது எனக்கு எங்கு செல்வதென்றே புரியவில்லை. நகரை நான்கைந்து முறை வலம் வந்து பார்த்தேன்; ஒன்றும் வழி தோன்றவில்லை.

இரவு எட்டு மணி இருக்கும். மழை 'சோ' என்று பெய்துகொண்டிருந்தது. அப்பொழுதுதான் எனக்குப் பிறப்பிடமான வேலூரில் இருக்கும் எனது நண்பன் அப்துல் காதரின் ஞாபகம் வந்தது. நான் அவனைப் பார்த்து சுமார் பத்து வருடங்களுக்கு மேலிருக்கும். ஆகவே, இப்பொழுது அவன் அதே ஊரிலேயே இருக்கிறானோ என்னமோ என்ற சந்தேகம் வேறு வந்து என்னைப் பேதலிக்கச் செய்தது. என்றாலும், இரவு எங்காவது தங்கிவிட்டு மறு நாள் அவனைப் போய்ப் பார்ப்பதென்ற முடிவுக்கு வந்தேன். ஆனால் அஜ்ஜா என்னும் அழகுத் தெய்வம் அன்றிரவே எனது முடிவை மாற்றிக்கொள்ளச் செய்துவிடும் என்று நான் அப்பொழுது எதிர்பார்க்கவில்லை. எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

அந்தப் பெரு மழையில் நனைந்துகொண்டே அப்பொழுது நான் சைனா பஜார் ரோட்டில்தான் நடந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் ஒரு காலி ஜட்கா போய்க் கொண்டிருந்தது. "ஏய், ஜட்கா!" என்றேன். இப்படி நான் நான்கைந்து முறை கூப்பிட்டும் அவன் ஒன்றும் சட்டை செய்யாமல் தன்பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான். 'திடுதிடு'வென்று ஓடி, வண்டிக்கு முன்னால் போய் நின்றேன். அப்பொழுதுதான் அவனும் வண்டியை நிறுத்தினான். "எங்கே போவணும், மாராஜ்?" என்று அவன் என்னைக் கேட்டபோது, அவனது கண்கள் சுழன்றன. அவன் ஒரு பெரிய கஞ்சாக் குடியன் போலிருக்கிறது.

வண்டியில் ஏறிக் கொண்டேன். சிங்கப்பூரிலிருந்து திரும்பிய கதையை அவனிடம்சொல்லி, இரவு எங்கேயாவது தங்குவதற்கு இடம் கிடைக்குமா என்று அவனையே கேட்டேன். எனக்குப் பிடித்தமானால் அவன் தன் வீட்டிலேயே தங்கலாமென்று சொன்னான். நானும் சரி என்று ஒப்புக் கொண்டேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஜட்கா வாலாவின் வீட்டை அடைந்தேன். அவனுடைய வீடு மீர்சாஹிப் பேட்டையில் ஓர் ஒதுக்குப் புறத்தில் இருந்தது. உதிர்ந்து போன ஓலைக் கூரையும், கதவுகளுக்குப் பதிலாகத் தொங்க விடப்பட்டிருந்த கோணிக் கந்தைகளும் அவனுடைய தரித்திர நிலைமையை எடுத்துக் காட்டுவனவாயிருந்தன. பெரு மழையின் காரணமாகத் தாழ்வாரத்தில் கட்டிப் போட்டு வைத்திருந்த வெள்ளாடு ஒன்று, ஜட்காவாலாவைக் கண்டதும், தனது இரண்டு குட்டிகளுடனும் சேர்ந்து கொண்டு, "அம்மே!" "அம்மே!" என்று பரவசத்துடன்

அலறிற்று. அந்த அலறலைக் கேட்டுத் தன்னுடைய அப்பா வந்திருப்பதை அறிந்து கொண்டவள்போல் உள்ளே யிருந்து ஒரு சிறுமி ஓடோடியும் வந்து, அவனை "பாவா !" என்று சொல்லிக் கொண்டே அன்புடன் தழுவிக் கொண்டாள். அவள் அப்படித் தழுவிக் கொண்டதைப் பார்த்தால், அவனை நெடுநாள் விட்டுப் பிரிந்திருந்தவள்போல் எனக்குத் தோன்றிற்று.

இந்த சமயத்தில் யாரோ ஒருவன் வந்து வீட்டு வாயிலில் நின்று கொண்டு, "அலிகான் !" என்று இரைந்தான். அவனைப் பார்த்தால் சட்டிக்காரன்போல் இருந்தான். உடனே ஜட்காவாலா விரைந்து சென்று அவனிடம் ஏதோ சில்லறையைக் கொடுத்து அனுப்பினான். அவன் சென்றதும், "அஜ்ஜா !" என்றான் அலிகான். "பாவா !" என்றாள் அஜ்ஜா.

"இரண்டு நாளாக ஏதாவது சாப்பிட்டாயா ?" என்று கேட்டான் அலிகான். அவன் அப்படிக் கேட்டபோது அவனுடைய நாக்குக் குழறிற்று. கண்கள் போதையின் மிகுதியால் முன்னை விட வேகமாகச் சுழன்றன.

"எப்படிச் சாப்பிடுவது ? எங்கிருந்து சாப்பிடுவது ?" என்று கேட்டாள் அஜ்ஜா. அவள் அப்படிக் கேட்டபோது அந்தக் குரலோசையிலே அழுகையும் ஆத்திரமும் கலந்து தொனித்தது.

"ஹூம்......இவர் சிங்கப்பூர் ஆசாமி; இப்பொழுது இவருக்கும் சேர்த்து ஏதாவது தயார் பண்ணு !" என்று எட்டணாவை எடுத்து அவள் கையில் கொடுத்தான் அலிகான். நான் ஒரு ரூபாயை எடுத்து அவனிடம் கொடுத்து அதையும் அவளிடம் கொடுக்கச் சொன்னேன். ஆனால் அவன் கொடுக்கவில்லை.

அந்த இரவில் கூடையை எடுத்துக் கொண்டு அவள் தனியாகக் கடைக்குப் புறப்பட்டாள். அந்த சமயத்தில் அலிகான், "அஜ்ஜா ! எனக்கென்னமோ இன்றைக்கு உடம்பு ஒன்றும் சரியாயில்லை. கொஞ்சம் படுக்கையைப் போட்டு விட்டுப் போ !" என்றான். அவளும் அப்படியே அவனுக்குப் படுக்கையைப் போட்டுவிட்டுக் கடைக்குச் சென்றாள். இதையெல்லாம் பார்த்தபோது, தன்னுடைய சொந்த சௌகரியத்துக்காகத்தான் அலிகான் படுதா முறையைக் கூடக் கைவிட்டு விட்டானோ என்று எனக்குத் தோன்றிற்று.

அஜ்ஜா சாமான்களுடன் திரும்பி வந்தாள். அவசர அவசரமாகச் சமைத்தாள். அப்பாவைச் சாப்பிடுவதற்கு எழுப்பினாள். அவன் எழுந்திருக்கவில்லை. ஏன் எழுந்திருக்கவில்லை ? அதுவும் கொஞ்ச நேரத்தில் தெரிந்து போய்விட்டது. அவன் எல்லையில்லாத நித்திரையில் ஆழ்ந்து விட்டான். அதை அறிந்ததும் அஜ்ஜா அலறினாள். நானும் திடுக்கிட்டு அவளருகில் சென்றேன். அவள் கண்ணீர் தோய்ந்த கண்களால் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். என் மனம் இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு விதமான சஞ்சலத்தால் தத்தளித்தது. அஜ்ஜாவின் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. மேலே வீட்டுக் கூரையை அண்ணாந்து பார்த்துக் கொண்டே, "அல்லாவின் கிருபை, அவ்வளவுதான் !" என்றேன்.

என்ன, நிலையற்ற வாழ்வு !

2

"என்னுடைய சொந்தச் செலவில்தான் அலிகானின் பிரேதத்தை எடுத்து அடக்கம் செய்ய வேண்டி நேர்ந்தது. பார்க்கப் போனால் அவன் இறந்ததற்காக அஜ்ஜா வருந்துவதற்கு ஒன்றுமே நியாயமில்லாமலிருந்தது. ஏனெனில், அவன் இருந்தபோதும் அவளுக்கு ஒன்றும் கஷ்டம் கொடுக்காமல் வைத்திருக்கவில்லை. காலையில் வண்டியைக் கட்டிக்கொண்டு சென்றால், "இன்றுடன் என்று திரும்புவாய், பாவா !" என்று கேட்கக்கூடிய நிலைமையில்தான் என்றும் இருந்திருக்கிறாள் அஜ்ஜா. காரணம், அலிகானுக்கு அஜ்ஜாவைக் காட்டிலும் சாராயத்தின் மீதும் கஞ்சாவின்மீதும்தான் அதிக அன்பு இருந்து வந்திருக்கிறது. கிடைத்ததைக் கொண்டு வயிறு நிறைய சாராயத்தை ஊற்றிக்கொண்டு, அதற்கு மேல் கஞ்சாவைக் குடித்துவிட்டு, வண்டியை வண்டி மேட்டில் நிறுத்தி விட்டு, வேறு கவலையொன்றும் இல்லாமல் வண்டிக்குள் படுத்துக்கொண்டு தூங்கியே அவன் தன் வாழ்நாளில் பாதியைக் கழித்திருக்கிறான். மற்றப் பாதி நாட்கள் அஜ்ஜாவுக்குச் சஞ்சலத்தைக் கொடுப்பதில் கழிந்திருக்கின்றன.

இந்த விஷயங்களெல்லாம் எனக்குத் தெரிந்த பிறகு அஜ்ஜாவின் மீதிருந்த அநுதாபம் அதிகமாயிற்று. ஆனால் நான் அந்த அநுதாபத்தை அவளிடம்

பூரணமாகக் காட்டிக் கொள்ளவில்லை. அப்படிக் காட்டிக் கொள்வது அவள் ஏதாவது தப்பர்த்தம் செய்துகொள்வதற்கு ஏதுவாகுமென்று நான் நினைத்தது தான் அதற்குக் காரணம். இதனாலேயே அலிகான் இறந்த பிறகு, அன்று அந்த ஈட்டிக்காரன் வந்து தனக்குச் சேரவேண்டிய பாக்கிக்காகக் குதிரை வண்டியையும் ஆடுகளையும் பறிமுதல் செய்தபோது, நான் ஒன்றும் பணம் கொடுத்து உதவவில்லை. ஆனால் அதற்காக அவள் மனம் நோவதைப் பார்த்து என்னால் மௌனம் சாதிக்கவும் முடியவில்லை. சிறிது அச்சத்துடனே அவளை நெருங்கி, "அஜ்ஜா! தற்சமயம் அவைகளை மீட்டுக் கொடுக்கக் கூடிய நிலைமையில்தான் அல்லா என்னை வைத்திருக்கிறார். என்றாலும் அவைகளால் உனக்கு ஒன்றும் பயனில்லை. வேண்டுமானால் என்னிடமிருந்து அந்தப் பணத்தை நீ ரொக்கமாகப் பெற்றுக்கொண்டு, உனது ஜீவியத்திற்கு ஏதாவது வழி தேடிக் கொள். இபபடி நான் வலுவில் உனக்கு உதவி செய்ய முன் வருவதைப் பற்றி நீ ஒன்றும் தப்பர்த்தம் செய்து கொள்ளாதே! உனது சகோதரன் மாதிரி என்னை ...."

இப்படி நான் சொன்னதும், ஏனோ அஜ்ஜாவின் முகத்தில் ஒருவிதமான பயங்கரப் பீதி குடி கொண்டது. அவளுடைய உதடுகள், 'உனது சகோதரன் மாதிரி என்னை ......' என்று முணுமுணுத்தது எனது காதில் லேசாக விழுந்தது.


நான் மெள்ள அவளது மெல்லிய கரத்தைப் பற்றினேன். ஆனாலும் "உன்னை நான் 'நிக்கா' செய்து கொள்கிறேன்" என்று சொல்ல எனக்கு அப்போது தைரியம் வரவில்லை. என்றாலும் "உன்னைக் கைவிட மாட்டேன்" என்று மட்டும் உறுதி கூறினேன். அதைக் கேட்டு அவளது முகம் மலர்ந்தது. அதைப் பார்த்து எனது மனமும் மகிழ்ந்தது.

3

"நாங்கள் இருவரும் வேலூருக்குப் பிரயாணமானோம். அங்கு போய்ச் சேர்ந்த சில நாட்களுக்கெல்லாம் எனது நண்பன் அப்துல் காதரைக் கண்டு பிடித்து விட்டேன். அவனைக் கண்டு பிடிப்பதில் எனக்கு ஒன்றும் சிரமம் ஏற்படவில்லை. ஏனெனில், அவன் அப்போது வேலூர் லாங் பஜாரில் பெரிய அரிசி மண்டி வியாபாரியா யிருந்தான். அவனுடைய உதவியைக் கொண்டு அஜ்ஜாவை எங்கள் மத சம்பிரதாயப்படி விவாகம் செய்து கொண்டேன். நான் கிரகஸ்தனாகவே எனது நண்பன் அப்துல் காதர் தானாகவே என்னைக் கூப்பிட்டு, அவனது மண்டியில் குமாஸ்தா வேலை பார்ப்பதற்காக மாதம் முப்பது ரூபா சம்பளத்தில் என்னை அமர்த்திக் கொண்டான். நானும் மிக்க சந்தோஷத்துடன் அஜ்ஜாவுடன் சேர்ந்து எனது வாழ்க்கைப் பிரயாணத்தைத் துவக்கினேன்.

நாங்கள் நாலைந்து வருடங்கள் 'பஹு-குஷி'யாக எங்கள் காலத்தைக் கழித்தோம். வாழ்க்கையில் வரவுக்கும் வயிற்றுப் பாட்டுக்கும் சரிக்கட்டுவதில் ஒரு சமயம் சங்கடம் ஏற்பட்டது. அதே சமயத்தில் எனக்கு அஜ்ஜாவின் கழுத்தில் தங்கச் சங்கிலி இட்டுப் பார்க்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அந்த ஆசைதான் கடைசியில் என்னை அஜ்ஜா நிராகரிப்பதற்குக் காரணமாகி விட்டது!

கதையைக் கேளுங்கள்: ஒரு நாள் எனது எஜமானன் என்னிடம் இருநூறு ரூபாயைக் கொடுத்து, பாங்கியில் போட்டு விட்டு வரும்படி சொன்னான். நான் அதை எடுத்து அழகான தங்கச் சங்கிலி



"இந்தச் சங்கிலி வாங்குவதற்கு உங்களுக்குப் பணம் ஏது?"

ஒன்று வாங்கி அஜ்ஜாவுக்குத் தெரியாமல் வீட்டில் வைத்து விட்டு, எஜமானனிடம் சென்று பணம் பறி போய் விட்டதாகச் சொன்னேன். எனக்கு அப்பொழுது அந்தத் தைரியம் எப்படி வந்ததோ, அது எனக்கே தெரியாது. அதை இப்போது நினைத்தாலும் எனக்கு வியப்பாயிருக்கிறது. எனது போலி நடிப்பைக் கண்டு என்னுடைய நண்பன் ஏமாந்து விட்டான். "என்ன செய்வது, போனால் போகிறது. எதற்கும் நீ போலீஸில் எழுதி வை!" என்றான் அவன்.

அன்றிரவு வீட்டுக்குச் சென்றதும் அஜ்ஜாவை அன்புடன் அழைத்து அவளது கழுத்தில் அந்தத் தங்கச் சங்கிலியை இட்டேன். அவள், "இந்தச் சங்கிலி வாங்குவதற்கு உங்களுக்குப் பணம் ஏது?" என்று வியப்புடன் கேட்டாள்.

"உனக்குத் தெரியாமல் இத்தனை நாட்களாகச் சேர்த்து வைத்திருந்தேன்" என்று நான் அப்பொழுது பொய் சொன்னேன்.

கடைசி வரையில் நான் அந்தப் பொய்யை வெளிப் படுத்தாமலே இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்? ஐயோ! நான் ஏனோ அந்த சமயம் அப்படிச் செய்யவில்லை?—எல்லாம் விதியின் விளையாட்டு!

அன்று அவள் புடைவை மேலாக்கின் நுனியைத் தனது இரு கரங்களின் விரல்களாலும் பிடித்து முறுக்கிக் கொண்டே, தலையைக் கவிழ்ந்து கொண்டு என்னுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். நான் மனங் கனிந்து மெள்ள அவளது முகவாய்க்கட்டையைத் தொட்டு, அவளுடைய தலையை நிமிர்த்த முயன்றபோது, அவள் தனது மெல்லிய கரங்களால் எனது கையைத் தட்டிவிட்டு, முல்லைச் சிரிப்புச் சிரித்தாள்! அந்த ஆனந்தக் களிப்பிலே நான் என்னை மறந்து சங்கிலி வாங்க எனக்குப் பணம் கிடைத்த உண்மையை அவளிடம் சொல்லிவிட்டேன். அதே மூச்சில் நான் 'விர்'ரென்று மண்டிக்குக் கிளம்பாமல் சிறிது நேரம் அங்கு நின்றிருந்தால், நான் சொன்னதைக் கேட்டு அவளது முகம் திடீரென்று மாறுதல் அடைந்ததைப் பார்த்திருப்பேன் என்பது எனக்குப் பிறகுதான் தெரிந்தது.

மண்டிக்குப் போய்விட்டு மாலை வீட்டுக்கு வந்ததும் அஜ்ஜாவைக் காணவில்லை. அவளுக்குப் பதிலாகக் கட்டிலின் மீது ஒரு கடிதம் கிடந்தது. அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தேன்:

"எனது அன்பருக்கு,

எனது மனதை எவ்வளவோ சிரமத்துடன் திடப்படுத்திக் கொண்டு உமக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடப் போகும் எனது அழகு உமது அறிவைப் பாழாக்கி விட்டது. அதற்காக என்னை மன்னிக்கவும். நீர் முதலில் சொல்லிய மாதிரி உம்மை நான் சகோதரனாகவே மதித்திருந்தால்? .... தங்கச் சங்கிலி பீரோவில் இருக்கிறது. என்னைத் தேட வேண்டாம்; தேடுவதில் பயனில்லை.

தங்கள்,

அஜ்ஜா."

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும், எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போலிருந்தது. அதை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, அந்தத் தங்கச் சங்கிலியை விற்றுப் பணத்தை அப்துல் காதரிடம் சேர்த்துவிடுவதென்று தீர்மானித்தேன்.


பணத்தைக் கொண்டு போய் அவனிடம் சேர்த்து விட்டு, நடந்த கதையைச் சொல்லி, "என்னை மன்னிக்க வேண்டும்" என்று நான் அவனை வேண்டிக் கொண்டேன்.

அவன் எனது வேண்டுகோளை ஒன்றும் கவனியாமல் முக மலர்ச்சியுடன், "அஜ்ஜா!" என்று உரக்கக் கூப்பிட்டான்.

என்ன ஆச்சரியம்! அடுத்த நிமிடம் அஜ்ஜா என் முன் வந்து நின்று புன்னகை புரிந்தாள். அவளைப் பார்த்து அப்துல் காதர், "நீ நினைத்தபடி நடந்து விட்டது. என்றாலும், என்னிடம் வேலை செய்யவோ, எனது முகத்தில் மீண்டும் விழிக்கவோ அவனுக்கு மனமிராது. ஆகவே, இந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, சென்னைக்குப் போய் ஏதாவது வியாபாரத் துறையில் ஈடுபட்டு, மனம் போல உங்களது வாழ்நாட்களைக் கழியுங்கள்" என்று சொல்லி, நான் கொண்டு வந்து கொடுத்த பணத்தைத் திருப்பி என்னிடமே கொடுத்து விட்டான்.

இப்பொழுது நாங்கள் அவனைப் பற்றி நினைக்காத நாளே கிடையாது ......"

"ஏன் நினைக்க மாட்டீர்கள்" என்று சொல்லிக்கொண்டே நான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தேன். அவனும் எழுந்து என்னைப் பின் தொடர்ந்தான்.



ஒரு டாங்கிக்கா? இல்லை, ஓர் டாங்கிச்சமருக்கு. இதிலிருந்து இந்த யுத்தம் எவ்வளவு பிரம்மாண்டமானதென்பது தெரியவில்லையா? அதுமாத்திரமின்றி நாம் உபயோகிக்கும் சகல சாமான்களும் படைகளுக்கு வேண்டியிருக்கிறது. ஒருவாரத்திற்கு நமக்கு 4 கலன் பெட்ரோல் தேவைப்படுகிறது. ஆனால் ஜெர்மன் தளபதி ரோமலை எதிர்த்துப் போராடும் படைகளுக்கு லக்ஷம் கலன் வேண்டியிருக்கிறது. நமக்கு ஒரு ஜோடி பாதரக்ஷை வேண்டும். ஆனால் ராணுவத்திற்கோ லக்ஷக்கணக்கான பூட்ஸுகள் தேவைப்படுகின்றன. இப்படித்தான் ஒவ்வொன்றிலும் நாம் வாங்கும் சகல சாமான்களும் நேராக யுத்தத்திற்கு தேவையானவைதான். ஆகவே நாம் சாமான்களைக் குறைவாக வாங்க வேண்டும். இதனால் மீதப்படும் பணத்திற்குவழி? ஏன் அதையும் ஓர் யுத்த ஆயுதமாக்கி விடுங்கள். ஜெயம் பெறுவதற்கு அதுதான் ஒரேவழி.

டிபென்ஸ் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகள்

...அல்லது டிபென்ஸ் லோன்களைத் தவிர வேறெதையும் வாங்குமுன் — **சற்றே யோசியுங்கள்**

★ ஸர்ட்டிபிகேட்டுகள் உங்கள் தபாலாபீஸில் கிடைக்கும். ரூ. 10-க்கு பத்துவருடத்தில் ரூ. 3/8 லாபம் கிடைக்கிறது.

C. P. U. 29 TM.

கம்பர் தரும் காட்சி

[டி. கே. சிதம்பரநாத முதலியார்]

40. உய்குநர் உய்வரே !

காட்டுக்குப் புறப்படுகிற ராமன் சீதையிடம் சொல்லிவிட்டுப் போவோம் என்று வருகிறான். சீதை எதிர்பாராத படி மரவுரியைத் தரித்து வருகிறான் ராமன். பக்கத்தில் வந்தவர்களோ ஒரே துயரத்தில் மூழ்கியவர்களாய்ப் புலம்பிக் கொண்டு வருகிறார்கள். விஷயம் என்ன என்று சீதை கேட்கிறாள். "தம்பி பரதன் ராஜ்யமாளப் போகிறான், நான் வனத்துக்குப் போய் விட்டுச் சீக்கிரம் வந்துவிடுகிறேன். நீ வருத்தங்கொள்ள வேண்டாம்" என்றான் ராமன்.

சீதைக்கு நாயகன் வனம் போகிறான் என்பது பற்றி வருத்தமில்லை. ராஜ்ய மிழந்தது பற்றியும் வருத்தமில்லை. ஆனால், 'நீ வருந்த வேண்டாம், போய் வருகிறேன் நான்' என்று சொன்ன சொல்தான் அவள் இதயத்தைப் பிளந்து விட்டது. பிரிவை அவளால் தாங்கவா முடியும்; தனக்குத்தானே வாய்விட்டுச் சொல்லுகிறாள் :

அன்ன தன்மையள்,
'ஐயனும் அன்னையும்

சொன்ன செய்யத்
துணிந்தது தூயதே :

என்னை, ? என்னை
இருத்தினென் றான்' எனா,—

உன்ன உன்ன
உயிர்உமி ழாநின்றாள்.

[ஐயனும் அன்னையும் சொன்ன செய்யத் துணிந்தது தூயதே : தந்தையும் தாயும், சொன்ன காரியங்களைச் செய்யத் துணிந்தது நல்ல காரியந்தான் ; என்னை, என்னை இருத்தி என்றான் எனா : என்ன காரணத்தினால், என்னை இங்கே இரு என்றான் ராமன் ; எனா : என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டவளாய் ; உன்ன உன்ன உயிர் உமிழா நின்றாள் : இப்படி மறுபடியும் மறுபடியும் எண்ணிக் கொண்டிருந்தாள் ; ஒவ்வொரு தடவையும் உயிர் அவளை விட்டுப் போகிற மாதிரியே இருந்தது.]

பிறகு ராமனைப் பார்த்தே சொல்லுகிறாள். கொஞ்சங்கூட இரக்கமில்லா மலல்லவா என்னைவிட்டு விட்டுப் போக நினைக்கிறாய் ?

'பரி(வு)இ கந்த
மனத்தொடு பற்றிலா(து),

ஒருவு கின்றனை ;
ஊழி அ ருக்கன் அங்(கு)

எரியும் என்ப(து)
யாண்டைய(து)? ஈண்டுநின்

பிரிவி னும்சுடு
மோபெருங் கா(டு)?' என்றாள்.

[பரிவு இகந்த மனத்தொடு பற்றிலாது : இரக்கம் என்பது இல்லாமல் மனம் கொண்டு தானே, அன்பு என்பது மில்லாமல் ; ஒருவுகின்றனை : என்னை விட்டு நீங்கப் பார்க்கிறாய் ; ஊழி அருக்கன் அங்கு எரியும் என்பது யாண்டையது : பூர்வமாய் பூமியைச் சுற்றிச் சுற்றி வருகிற சூரியன் அங்கே எங்கேயோ கொதிக்கும் என்று சொல்வது எப்படி ஏற்படும் ; ஈண்டு நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு : இங்கே இப்போதே என்னைச் சுடுகிறதே உன் பிரிவு. இதைப் போலவோ சுட்டு விடும் அந்தப் பெருங்காடு.]

ராமன் அவள் சொன்ன சொல்லைக் கேட்டான். அவள் மனசைப் பாடாய்ப் படுத்துகிற நினைவையும் தெரிந்து கொண்டான். கண்ணீர் பொழிகிறதைப் பார்த்தால் அவள் வற்றாத ஒரு கண்ணீர்க் கடல்தான் என்று சொல்ல வேண்டும். இவளை எப்படி விட்டு விட்டுப் போவது என்று திகைத்து நிற்கிறான் அவன்.

அண்ணல் அன்னசொல்க்
கேட்டனன்; அன்றியும்
உள்நி வந்த
கருத்தும் உணர்ந்தனன்;
கண்ணின் நீர்க்கடல்க்
கைவிட நேர்கிலன்,—
எண்ணு கின்றனன்
என்செயல்ப் பாற்றெனா.

[அண்ணல் அன்னசொல்க் கேட்டனன்: ராமன் சீதை சொன்ன சொல்லைக் கேட்டுக் கொண்டான்; அன்றியும் உள்நிவந்த கருத்தும் உணர்ந்தனன்: மேலும் அவள் மனசில் நிகழ்கிற நினைவையெல்லாம் உணர்ந்து கொண்டான்; கண்ணின் நீர்க்கடல் கைவிட நேர்கிலன்: கண்ணீர் மயமாகிய சீதையை விட்டு விட்டுப் போகிறது என்பதை எண்ணவே முடியவில்லை; எண்ணுகின்றனன் என் செயல்ப் பாற்றுளா: யோசித்துக் கொண்டு நிற்கிறான், என்ன செய்யக் கிடக்கிறது! என்று.]

ராமன் இப்படித் திகைத்து நிற்கும்போது, அரண்மனையின் உள்க் கட்டுக்குப் போகிறாள் சீதை.

அனைய வேலை,
அகமனை எய்தினள்;
புனையும் சீரம்
துணிந்து புனைந்தனள்;
நினைவில் வள்ளல்பின்
வந்(து)அயல் நின்றனன்;—
பனையின் நீள்கரம்
பற்றிய கையினள்.

[அனைய வேலை அகமனை எய்தினள்: அந்த வேளை உள்க்கட்டுக்குப் போனாள்; புனையும் சீரம் துணிந்து புனைந்தனள்: தான் உடுத்திக் கொள்ளுவதற்கான ஒரு மரவுரியை எடுத்து மிக்க துணிவோடு கட்டிக்கொண்டாள்; (பட்டல்லாத வேறொன்றையும் அறியாத மேனியில் மரவுரியைச் சுற்ற எப்படி மனம் துணியும்!) நினைவில் வள்ளல் பின் வந்து அயல் நின்றனள்: மனம் ஸ்தம்பித்துப் போய் நின்ற ராமன் பின்னாக வந்து பக்கத்தில் நின்றாள்; எப்படி நின்றனள்; பனையின் நீள்கரம் பற்றிய கையினள்: பனை போன்ற ராமனது நீண்ட கைகளைப் பற்றியவளாய் நின்றாள்.]

காட்டுக்குப் போக எத்தனித்து விட்டாள் சீதை! என்ன துணிவு. அவள் பாதம் கல்லையும் சரலையும் எப்படி மிதிக்கும்? இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டு நாம் அந்த இடத்தில் நிற்க முடியுமா? உயிர்தான் நம்மோடு ஒட்டி நிற்குமா? அங்குள்ளவர்கள் பட்ட பாட்டைப் பாருங்கள்!

ஏழை தன்செயல்
கண்டவர் யாவரும்,
வீழும் மண்ணிடை
வீழ்ந்தனர்; வீந்திலர்;—
வாழும் நாள்உள
என்றபின் மாள்வரோ!
ஊழி பேரினும்
உய்குநர் உய்வரே.

[ஏழை தன் செயல் கண்டவர் யாவரும்: காட்டுக்குப் போக எத்தனித்து நின்ற சீதையின் செயலைக் கண்டவர் எல்லாரும்; வீழும் மண்ணிடை வீழ்ந்தனர்: புரண்டு விடுவதாகத் தோன்றிய பூமியில் அப்படி அப்படியே வீழ்ந்தார்கள்; வீந்திலர்: அப்படி விழுந்த காரணமாக உயிர் போயிற்றா—இல்லை; வாழும் நாள் உள என்றபின் மாள்வரோ: உயிர் போவதற்கு இன்னும் வருஷங்கள் இருக்கின்றன என்று ஜாதகத்தில் ஏற்பட்டிருக்கும்போது எப்படி உயிர் போகும்; ஊழி பேரினும்: பேரண்டம் முழுவதும் தகர்ந்து போகட்டுமே; உய்குநர் உய்வரே: பிழைப்பவர்கள் பிழைத்தே தீருவார்கள்.]

நல்ல தீர்மானம்



பெரியவர்:—ஏண்டா அம்பி உங்கள் வீட்டில் தினம் எத்தனை மணிக்குச் சாப்பிடுவீர்கள்?

அம்பி:—தினம் பத்து மணிக்கெல்லாம் சாப்பிட்டுவிடுவோம், தாத்தா! ஆனால் இன்றைக்கு நீங்கள் போனபிறகுதான் சாதம் போடுவேன் என்று அம்மா சொன்னாள்!



இதை அளிப்பதிலேயே ஒரு அலாதி அந்தஸ்து

டிலக்ஸ் டெனர் சிகரெட்டை உங்கள் சிநேகிதர்கள் ரஸிப்பார்கள். 100% உத்தரவாதமுள்ள தூய வர்ஜீனியா புகையிலை யிலிருந்து டெனர்ஸ் தயாரானவை. டி லக்ஸ் சிகரெட்டுகள் உங்களது ரஸிகத் தன்மைக்கு ஒரு அத்தாட்சியாகும். இவைகளின் தனி மணம் இவைகளுக்கே உரித்தானது. மெல்லிய தொண்டையுடையவர்கள் அனுபவிக்கக்கூடியது டெனர்தான். பெரிய அல்லது ஸ்டாண்டர்டு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்.

BY APPOINTMENT TO THE MOST HONOURABLE THE MARQUESS OF LINLITHGOW, VICEROY AND GOVERNOR GENERAL OF INDIA

TENOR

de luxe CIGARETTES

Guaranteed 100% Pure Virginia Tobacco

டி லக்ஸ் டெனர் சிகரெட்ஸ்

ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

உங்களது உத்தரவாதம்

EASTERN LICENCEES — P. B. NO 9029 — CALCUTTA.

கடிகாரம் வேண்டாம்

[என். என்.]

அன்று சீனுவிற்கும் அவன் தந்தைக்கும் பெரிய தர்க்கம்.

தன் பள்ளிக்கூடத்தில், தன்னைத் தவிர, மற்ற எல்லாப் பையன்களும் அழகான, தங்கக் கடிகாரங்கள் போட்டுக் கொண்டிருப்பதாகவும், தான் மாத்திரம் கேவலம், ஒரு சாதாரண நிக்கல் கைக்கடிகாரங் கூட இல்லாமல் வெறும் கையுடன் இருப்பது ரொம்ப அவமானமாக இருப்பதாகவும், தனக்கும் ஒரு கைக் கடிகாரம் வாங்கித் தந்துதான் ஆகவேண்டும் என்றும் சீனு ஒற்றைக் காலில் நின்றான்.

"எல்லோரும் ஒரு மடத்தனமான காரியத்தைச செய்தால் நாமும் அதைச் செய்ய வேண்டும் என்று எழுதி யிருக்கிறதா, என்ன? ...உனக்குக் கடிகாரத்திற்கு, என்னடா, அவசரம்? இந்த வருஷம் 'பாஸ்' பண்ணினால் உனக்குத் தங்கக் கடிகாரம் வாங்கித் தருவேன், போ!" என்றார் அவன் தந்தை.

"என்ன அப்பா! நான் எல்லோரையும் போல் உயர்ந்த தங்கக் கடிகாரந்தான் வேண்டும் என்கிறேனா? நேற்று 'மூர்' மார்க்கெட்டில் யாரோ ஒருவன் புதிதாகக் கடை திறந்திருக்கிறான். பள்ளிக்கூடத்திற்குப் போகும் பொழுது பார்த்தேன்; வரும்பொழுதுகூடப் பார்த்தேன். அவன் அழகான கடிகாரங்களை நூற்றுக் கணக்கில் குவித்து வைத்துக் கொண்டு விற்கிறான். விலை, அப்பா, கொள்ளை மலிவு! எவ்வளவு பேர் தெரியுமா, ஒரு நாளைக்கு அவனிடம் கடிகாரம் வாங்கிக்கொண்டு போகின்றனர்?" என்று அழாக் குறையாகக் கெஞ்சினான் சீனு.

"அட அசடே! உனக்கு ஒன்றும் தெரியாது. சிறு பையன்தானே! தங்கக் கடிகாரமாவது ஏழு ரூபாய்க்கு விற்கிறதாவது! இந்த மாதிரி, மலிவான சாமான்களை நம்பி வாங்கக்கூடாது. இன்றைக்கு வாங்கிய கடிகாரம் அடுத்த வாரம் 'படக்'கென்று நின்று போய் விடும்! அப்புறம், பிரம்மதேவன் வந்தாலும் கூட அதை அசைக்க முடியாது!" என்றார் அவன் தந்தை.

மனமுடைந்தவனாய், துக்கமும் ஏமாற்றமும் தொண்டையை அடைக்க, கலங்கிய கண்களுடன் வெளியே சென்றான் சீனு.

மறு நாள் காலையில் வழக்கம்போல் பள்ளிக்கூடம் போகும்பொழுது கால் மணி நேரம் கடியாரக் கடை வாசலில் நின்று விட்டுத்தான் சென்றான். கடைக்காரன் வெகு வேகமாகக் கடிகாரங்களைக் கேட்ட விலைக்கு விற்றுக் கொண்டிருந்ததைப் பார்த்த அவன் மனம், தன்னிடம் ஒரு ஐந்து ரூபாய் கூட இல்லையே என்று ஏங்கித் தவித்தது.

மாலையில், பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வரும்பொழுது, வழக்கம்போல் கடிகாரக் கடைக்குச சென்றான்.

அவனைத் தூக்கிவாரிப் போட்டது!

கடிகாரக் கடை பூட்டப்பட்டிருந்தது!

ஐந்தாறு பேர்கள் கடை வாசலில் நின்றுகொண்டு உரக்க ஆத்திரத்துடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தது சீனுவின் கவனத்தைக் கவர்ந்தது.

"என்ன ஐயா, அக்கிரமக் கொள்ளையாகவல்லவா இருக்கிறது! நேற்றுக் காலையில் வாங்கிய கடிகாரம் இன்று காலையில் ஓடமாட்டேன் என்றுபிடிவாதமாக நின்று விட்டது!" என்றார் ஒருவர்.

"எனக்கு அப்பொழுதே சற்றுச் சந்தேகமாகத்தான் இருந்தது. என்

சரியான பதில்தான்!



எஜமான் :—உன்னை எத்தனை நாள் நான் சீக்கிரம் வா, சீக்கிரம் வா என்று சொல்வது?

வேலைக்காரி :—இன்னும் பதினைந்து நாளைக் குச் சொல்லி வாருங்கள்! நான் முதல் தேதி யோடு நின்றுவிடுகிறேன்!

னடா, இவன் இருபது ரூபாய் பெறுமான முன்னே கடிகாரத்தை ஏழு ரூபாய்க்கு நமக்குத் தந்தானே என்று! வாங்கி இரண்டு நாள் கூட ஆகவில்லை. சாவி கொடுத்தேன், ஐயா! அப்படியே கையோடு வந்து விட்டது சாவி கொடுக்கும் திருகாணி! இந்த வயிற்றெரிச்சலுக்கு என்ன செய்வது?'' என்றார் இரண்டாமவர்.

இதே ரீதியில் அங்கு கூடியிருந்த மற்றவர்களும் புகார் செய்து கொண்டிருந்தனர். சீனு, ''நல்ல வேளை, அப்பா சொன்னதற்குக் கோபித்துக் கொண்டேனே! அவர் விஷயமறிந்து தான் சொல்லி யிருக்கிறார்! நானும் அவசரப்பட்டு, இவர்களைப்போல் ஒரு கடிகாரத்தை வாங்கிவிட்டு அவஸ்தைப் படாமல் தப்பித்துக் கொண்டேனே!'' என்று எண்ணி, எண்ணி மனம் பூரித்தவனாய் வீடு வந்து சேர்ந்தான்.

அவன் தந்தை ஹாலில் உட்கார்ந்து கொண்டு ஏதோ வாசித்துக் கொண்டிருந்தார். சீனுவைப் பார்த்ததும், ''சீனு, இங்கே வா!'' என்றார்.

''என்ன, அப்பா!'' என்று கேட்டுக் கொண்டே, சீனு தந்தையிடம் சென்றான்.

''காலையில் பள்ளிக்கூடம் போவதற்கு முன் கடிகாரம் இல்லையே என்று வருத்தப் பட்டுக்கொண்டு, முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டு, போனாயல்லவா?...''

''ஆமாம்.......'கடிகாரம் வேண்டாம்' என்று உங்களிடம் சொல்ல வந்தேன். அதற்குள் நீங்களே கூப்பிட்டு விட்டீர்கள்!'' என்றான் சீனு.

''அட அசடே! நான் வாங்கித் தரவில்லை என்ற கோபமா?...வருத்தப் படாதே!....நீ காலையில் பள்ளிக்கூடம் சென்ற பிறகு, நானும் யோசித்துப் பார்த்தேன்....பாவம், நீ வருத்தப்பட்டதைப் பார்த்த பிறகு, என் மனம் கேட்கவில்லை...''

''வாங்கி விட்டீர்களா?....''

''சாப்பிட்டவுடன் நேரே அந்தக் கடைக்குச் சென்றேன். நல்லவேளை: நான் இன்னும் பத்து நிமிஷம் கழித்துப் போயிருந்தால், கிடைத்திருக்காது. கடிகாரக் கடைக்காரன் அவசர அவசரமாகக் கடையைப் பூட்டிக் கொண்டிருந்தான். வேறு ஊருக்குப் போவதாகச் சொன்னான். இருப்பதற்குள் நல்ல கடிகாரமாக ஒன்றைப் பொறுக்கி எடுத்து, எட்டு ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு வந்தேன்!...இதோ பார்!'' என்றார் சீனுவின் தந்தை.

சீனுவின் முகத்தில் ஈயாடவில்லை.

ஸ்ரீமதி என். ஸி. வஸந்தகோகிலம்

பாடிய புதிய "எச். எம். வி." ரிகார்டு



N. 18206 { ஞானகுருபர (பாகம் 1) பல்லவி
" (பாகம் 2) இராகமாலிகை

"HIS MASTERS VOICE"

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

"எச். எம். வி." எஃகு ஊசிகள்

சில்லறையில் விற்க நிர்ணயித்த விலை 200 ஊசிகள்
அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1/8/- மட்டுமே

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.